Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை (19.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 170
















# இலங்கை விவகாரம் குறித்து டில்லியில் இன்று மந்திராலோசனை



(புதுடில்லி)

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் குறித்து ஜெனிவாவில் இந்தியா எவ்வாறு நடந்து கொள்வது என்று இன்று புதுடில்லியில் மிக முக்கிய மந்திராலோசனைக்கான உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

டில்லியில் சோனியா காந்தி தலைமையில் நடைபெறவுள்ள காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம் குறித்து சோனியா காந்தி ஆலோசனை நடத்தவுள்ளார். காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் பொதுக்குழு சோனியா காந்தி தலைமையில் டில்லியில் கூடுகிறது. இதில் கட்சி எம்.பி.க்கள் கலந்து கொள்கின்றனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை அமைப்பில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன. தீர்மானத்தில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்றும் இல்லா விட்டால் ஐ.மு. கூட்டணியில் தி.மு.க. நீடிக்காது என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் என்ன நிலை எடுப்பது என்பது குறித்து காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது. கூட்டத்தில் காங்கிரசின் நிலையை சோனியா காந்தி அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் துணைத் தலைவராக

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரஜை கிழக்கில் பலி

(கொழும்பு)

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்திச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இந்தியப் பிரஜை ஒருவர் பலியாகியுள்ளார். நேற்று பிற்பகல் இடம்பெற்ற இவ்விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மணியம் என்பவரே உயிரிழந்ததாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது பின்னால் வந்த டிரக்டருக்கு வழிவிடுவதற்காக மோட்டார் சைக்கிளை ஓரமாக்கியுள்ளார். இதன்போது, சைக்கிள் கவிழ்ந்து அவர் கீழே

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர்களை பாதுகாக்க இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி வரும் தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்கு அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணி தெரிவித்துள்ளார். தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டாம் என இலங்கையிடம் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

லோக்சபாவில் எழுத்து பூர்வமாக அளித்த பதிலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கவும் அவர்களின் பாதுகாப்புக்காகவும் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனக் கூறினார்.

## மௌனத்தை கலைக்கவேண்டும் புதுடில்லி மன்மோகனிடம் "ஜெயா" கோரிக்கை

(சென்னை)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.


இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு மௌனம் சாதிப்பது ஏன் என்றும் அவர் அந்தக் கடிதத்தின் மூலம் மன்மோகன்சிங்கிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில், நடத்தப்பட்டதாகக் கூறப்படும் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று, தமிழகம் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். எனினும், அதனை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகிறது.

அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்திற்கு இந்திய மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும். அத்துடன், அமெரிக்கத் தீர்மானத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## அடிக்கடி நடக்கும் விபத்துக்கள் பொறியாக மாறும் கைதடிப்பாலம்



(யாழ்ப்பாணம்)

கைதடிப் பாலத்தில் நேற்று அதிகாலை கன்ரர் வாகனமும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் கன்ரர் வாகனத்தில் பயணித்த நால்வர் காயமடைந்தனர். கன்ரர் வாகனமும் பலத்த சேதமடைந்தது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் கன்ரர் வாகனத்தில் பயணித்த சாரதியான விடத்தல்தீவு, மன்னாரைச் சேர்ந்த பிரான்சிஸ் சாள்ஸ் டொன் (வயது - 33) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவர் சிகிச்சைக்காக நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கன்ரர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பட்டதாரிகள் 48 பேருக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் முன்வைத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சர் ஆயிரம் பாடசாலைத் திட்டத்திற்கு என விசேடமாக மேலும 48 கணித, விஞ்ஞான, ஆங்கில, தகவல்தொழிநுட்ப பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

இதன்படி அதற்கான நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை மாகாணக்கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இவர்கள் அனைவரும் வன்னிப்பிரதேச பாடசாலைகளுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி அளவில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க முடியுமென இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளரின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை அடகுவைக்க நான் தயாராக இல்லை



(மத்தள)

நாட்டை அடகுவைக்க நான் தயாராக இல்லை என்றும், அரசை விமர்சனம் செய்பவர்களுக்கு அபிவிருத்தியின் ஊடாகவே நான் பதிலளிக்க விரும்புகிறேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ விமான நிலையம் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எமது நாட்டில் 1912 ஆம் ஆண்டு கொழும்பு குதிரைப் பந்தயத் திடலிலேயே முதன்முறையாக விமானம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தென்மராட்சி இலக்கிய அணியினரின் சேவைகள் வரவேற்கத்தக்கவை

## வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஸ்ணகுமார்

எமது வாழ்வோடு இணைந்திருந்த கலைகலாசார நிகழ்வுகள் பண்பாடுகள் அருகிவரும் இக்காலத்தில் இலக்கிய நிகழ்வுகளை நடத்தியும் கலைஞர்களைக் கௌரவித்தும் உள்ளூர் எழுத்தாளர்களைக் கௌரவித்தும் வரும் தென்மராட்சி இலக்கிய அணியினரின் சேவை வரவேற்கத்தக்கதும் பாராட்டப்படக் கூடியதுமாகும்.

இலக்கிய நிகழ்வுகள் ஊடாக மாணவர்கள் தமிழ் மற்றும் இலக்கிய அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

தென்மராட்சி இலக்கிய அணியினரின் நான்காவது இலக்கிய நிகழ்வினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் அ.கைலாயபிள்ளை, தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் "சிந்தனைச் சிற்பி" சி.கலாமோகன் கம்பவாரிதி இ.ஜெயராஜ பொனனாடை போர்த்திப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் பண்டிதர் கணபதிப்பிள்ளை கௌரவிக்கப்பட்டதுடன் அவர் எழுதிய "அசதிக் கோவை" எனும் நூலுக்கு, கவிஞரும் தென்மராட்சி இலக்கிய அணித் தலைவருமான த.நாகேஸவரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார்.

அத்துடன் கைகேயி, தசரதன், இராவண்ன் குற்றவாளிகள், குற்றமற்றவர்கள் என்ற விடயமாக வழக்காடு மன்றமும் நடத்தப்பட்டது. கம்பவாருதி இ.ஜெயராஜ் மற்றும் ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் வழக்காடு மன்றின் நீதிபதியாகச் செயற்பட்டு அரும்பெரும் கருத்துக்களை மாணவர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் வழங்கினர்.

வழக்காடு மன்றில் வழக்கு பெறுநர்களாகவும் வாதிவோராகவும் க.ஈஸ்வரன், ச.மார்க்கண்டு, க.நடேஸ்வரன், வே.உதயகுமார், பா.விக்னேஸ்வரன், அ.வாசுதேவ ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

# கட்டுமான விதிகளை மீறி மதில் கட்டியவருக்கு எச்சரிக்கை

தாவடி தெற்குப் பகுதியில் கட்டுமான விதிகளை மீறி ஒழுங்கைக்கான எல்லை மதிலைக் கட்ட முற்பட்ட ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டார். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

தாவடி தெற்குப் பகுதியில் குடியிருப்பாளர் ஒருவர் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக ஒழுங்கைக்கான எல்லை மதிலை அமைத்துவருவதை அயலவர்கள் தாவடி தெற்கு ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலையத்தில் இயங்கிவரும் சிவில் பாதுகாப்புக் குழுவிடம் முறையிட்டனர். அதனைத் தொடர்ந்து நடவடிக்கையில் இறங்கிய பாதுகாப்புக் குழுவின் செயற்பாட்டை ஏற்க மறுத்த குடியிருப்பாளர் பற்றிச் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு இணங்க குறித்த நபர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதோடு உரிய முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டார்.

# மாங்குளம் – துணுக்காய் காலைநேர பேருந்தின் அவலம்



(மாங்குளம்)

மாங்குளத்திலிருந்து மல்லாவி துணுக்காய் செல்லும், காலைநேர பேருந்து சேவை இன்மையால் பயணிகள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

மாங்குளத்திலிருந்து காலை 8.15 மணிக்கே முதலாவது பேருந்து சேவை ஈடுபடுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட மாணவர்கள் பலரும் இதில் பயணம் செய்தே செல்லவேண்டியுள்ளது.

இதனால் உரிய நேரத்திற்கு கடமையாற்றுவதற்குச் செல்ல முடியாத இடர்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இதில் பெருமளவான பயணிகள் ஏற்படுத்துவதுடன் பலர் அதில் பயணம் செய்ய முடியாது பரிதவிக்கும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே காலை நேரப் பேருந்து சேவையை அதிகரிப்பதுடன் காலை 7.00 மணியளவில் பேருந்துசேவை ஒன்று நடத்தப்படுமாயின் பல்வேறு சிரமங்கள் தவிர்க்கப்படும் எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

# தாண்டிக்குளம் விபத்தில் மூவர் காயம்

(வவுனியா)


வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தொன்றில் மூவர் காயமடைந்துள்ளனர்.

தாண்டிக்குளம் பகுதியில் உள்ள உணவகமொன்றில் இருந்து வீதியை கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியுடன் எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதுண்டதுடன் மேலும் ஓர் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிக்சக்கர வண்டியுடனும் அதே மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.


பாடசாலை மாணவன் ஒருவர் செலுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படும் இம் மோட்டார் சைககிள் மிக வேகமாக வந்த நிலையில் கட்டுப்பாட்டை இழந்தே முச்சக்கரவண்டி மற்றும் ஏனையவற்றுடனும் மோதுண்டுள்ளதாக நேரடியாக விபத்தை பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.


இதேவேளை விபத்தின் காரணமாக மூவர் விபத்துக்கள் பிரிவில் அனுமதிக்கப் பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை சம்பவம் தொடர்பில் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பொன்னாலை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணர் சிலைக்கு முன்பாக பக்தர்கள் கற்பூரதீபம் ஏற்றி வழிபாடுசெய்து வழிபடுவதனைக் காணலாம். (50)







கருணைப்பாலம் பரிசளிப்பு நிகழ்வில் முதல் நிலையைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்களான, அ.பாங்கயற் செல்வன் (கிளிநொச்சி ம.வி), ஜெயந்தி குணபாலசிங்கம் (புனித தெரேசா பெண்கள் கல்லூரி), காஞ்சனாதேவி சிவகரன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆரம்பப்பாடசாலை) ஆகியோரை பொன்னாடை போர்த்தி பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

# கறுக்காய் சந்தியில் இருந்து யாழ். சேவை ஆரம்பிப்பார்களா?

(வரணி)

வரணி சந்தையில் இருந்து காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கும் நேரடி யாழ்ப்பாணத்துக்கான தனியார் மினிபஸ் சேவையை வடக்கு வரணி வாழ் மக்கள் நன்மை கருதி கறுக்காய் சந்தியிலிருந்து ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சேவையை ஆரம்பித்தால் அப்பகுதி மக்களும் பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கின்றனர். இச்சேவை கறுக்காயிலிருந்து ஆரம்பிப்பதால் அப்பகுதி மக்களும் நேரடியாக யாழ். செல்ல மற்றும் யாழ். வைத்தியசாலைக்கு மதியநேரப் பார்வைக்கு இலகுவாகச் செல்ல முடியும். தற்போது கொடிகாமம் சென்று யாழ்ப்பாணத்திற்கான பேருந்தின் மூலமே வைத்தியசாலைக்கும் மற்றும் தேவைகளுக்கும் சென்றுவருவது குறிப்பிடத்தக்கது. (150)

# நானாட்டான் பிரதேசத்தில் சமுர்த்திக் கொடுப்பனவு

(மன்னார்)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு தற்போது 3 ஆம்கட்ட சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக நானாட்டான் பிரதேச செயலர் அகஸ்ரஸ் சந்திரையா தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 31 கிராம சேவைய்யாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2,140 குடும்பங்கள் சமுர்த்திக் கொடுப்பனவுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலயம் 1 இல் 15 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் வலயம் 2 இல் 16 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுமே சமுர்த்திக் கொடுப்பனவுக்கு உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இச்சமுர்த்திக் கொடுப்பனவானது குடும்ப உறுப்பினர்களின் தொகைக்கு அமைய வழங்கப்படுகின்றன. 1 தொடக்கம் 2 வரையான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 750 ரூபாவும் 3 தொடக்கம் 5 வரையான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 1,000 ரூபாவும் 6 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடுமபங்களுக்கு 1,500 ரூபாவும் மாதாந்தம் சமுர்த்திக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றன.

சமுர்த்திக் கொடுப்பனவுக்காக சுமார் 2 மில்லியன் ரூபா நிதி ஒவ்வொரு மாதத்துக்கும் ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் நானாட்டான் பிரதேச செயலர் அகஸ்ரஸ் சந்திரையா தெரிவித்தார்.

# ஒளிராத வீதி விளக்குகள்; அபாயத்தில் போக்குவரத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொது வைத்தியசாலைச் சந்திக்கும் புத்தூர் சந்திக்கும் இடைப்பட்ட ஏ - 9 வீதியில் உள்ள வீதி மின்விளக்குகளில் அநேகமானவை ஒளிராமையால் இரவு வேளைகளில் இவ் வீதியூடாகச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதிவரையான பகுதியிலேயே இவ்வாறு பல வீதி மின்விளக்குகள் ஒளிராமையால் இரவு வேளைகளில் இவ் வீதியூடாகச் செல்வோர் விபத்துக்களை எதிர்நோக்கவேண்டிய நிலை காணப்படுகிறது.

ஏனைய வீதிகளில் உள்ள மின்விளக்குகள் ஒளிரும் நிலையில் இவ்வீதியில் உள்ள மின்குமிழ்கள் மட்டும் இவ்வாறு செயலிழந்த நிலையில் இருப்பதால் பாதிக்கப்படுவது பயணிகளும் பொது மக்களுமே என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, மின்விளக்குள் ஒளிராமையால் இரவுவேளைகளில் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படும் நிலையில், ஒளிராமல் உள்ள வீதி விளக்குகளை சீர் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ)

# மாணவரின் கல்வித்தர வீழ்ச்சிக்கு வரவின்மையும் பிரதான காரணம்

## - கோண்டாவில் இந்து அதிபர் தெரிவிப்பு

பாடசாலைக்குப் பிள்ளைகள் ஒழுங்காகச் செல்வதைப் பெற்றோர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்கள் நூறுவீதம் வரவு இருந்தால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என பாடசாலை அதிபர் கே.கே. தவகீஸ்வரன் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் கடந்த புதன்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

மாணவர்களிடையே கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்கு வரவின்மை பிரதான காரணமாக அமைகிறது. சின்னச்சின்னத் தேவைகளுக்காக பெற்றோர், பிள்ளைகளை மறிக்கக் கூடாது. உறவினர் திருமணம் மற்றும் வீட்டில் நடைபெறும் சிறிய நிகழ்வுகளில் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கலந்து கொள்வதற்கு மாணவர்களைப் பெற்றோர்கள் வழிப்படுத்த வேண்டும்.

பாடசாலையில் வகுப்பறைக் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது, விளையாட்டு, கலைநிகழ்வுகள், ஆக்கத்திறன் போட்டிகள் போன்ற இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை பெற்றோர் ஊக்கப்படுத்த வேண்டும்.

மாணவர் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்காது தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும், இலைமறைகாயாக உள்ள திறமைகளை வெளிப்படுத்தவும், இணைப்பாடவிதான செயற்பாடுகள் உதவுகின்றன.

பாடசாலை தவிர்ந்த வேறு இடங்களுக்குப் பிள்ளைகளைத் தனியாக அனுப்புவதைப் பெறறோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலும் தனியாகச் செல்லும் பிள்ளைகள் எங்கு செல்கின்றார்கள். என்ன செய்கிறார்கள் என்பதைப் பெற்றோர் கண்காணித்துக்கொள்ள வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளையின் கல்வி முன்னேற்றம் தொடர்பாக குறைந்தது மாதத்தில் ஒருதடவையாவது வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடுவதை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டுமெனவும் குறிப்பிட்டார். (10)

# நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடாத வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் முத்திரையிடாத நிறுத்தல் அளவைகளை வைத்திருந்த 9 வர்த்தகர்களுக்கு எதிராக இன்று வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அளவீடுகள் அலகு நியமனங்கள் மற்றும் சேவைகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவுக்கான பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்தவாரம் வவுனியா மன்னார் மாவட்டங்களில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின்போது முத்திரையிடாத நிறுத்தல் அளவைகளை வைத்திருந்த வர்த்தகர்கள் இனம் காணப்பட்டனர்.

கடந்த பல வருடங்களாக அந்தந்த மாவட்ட செயலகங்களில் உள்ள எமது திணைக்களத்தில் முத்திரையிடும் செயற்பாடு இடம்பெற்று வருகின்ற நிலையில், வர்த்தகர்களின் அசமந்தப்போக்கின் காரணமாக முத்திரையிடாது நிறுத்தல் அளவைகளைப் பயன்படுத்தி வருவதனால் நாம் இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டோம். முத்திரையிடாத நிறுத்தல் அளவைகளினால் நுகர்வோர் பாதிப்படைகின்றனர்.

எனவே, நாம் வவுனியா மாவட்டத்தில் 9 வர்த்தகர்களுக்கு இன்றும், மன்னார் மாவட்டத்தில் 6 பேருக்கு எதிராக 21 ஆம் திகதியும் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அனைத்து வர்த்தகர்களும் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடுவதை தவறாது மேற்கொள்ள வேண்டும். 2012 ஆம் ஆண்டு வவுனியாவில் 73 வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 56 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு ஒரு இலட்சத்து 85500 ரூபா தண்டம் அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (160)

# நல்லொழுக்க நிறுவனத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி அலுவலகத்தில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசெயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்றது.

இதில் நடப்பு வருட நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெற்றது. இதில் தலைவராக பா.ரகுநாதன், உபதலைவராக திருமதி சரஸ்வதி தியாகராஜா, பொருளாளராக க.பரஞ்சோதி, செயலாளராக ஆ.குலநாதன், ஆகியோருடன் கா.முத்துவேல், திருமதி க.சியாமா, செ.ஸ்ரீகாந்தன், த.ஸ்ரீதரன், செல்வி க.ஞானேஸ்வரி ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் நகம நிறுவனத்தின் முகாமையாளர், ஐ.லோகநாதன், ரகம நிறுவனத்தின் ஆலோசகர் திருமதி சுமதி தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். (109)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே. பிரதேச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# யாழ்.மாவட்ட செயலகத்தில் மகளிர் தினநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்குழு ஆகியன இணைந்து நடத்தும் மகளிர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள ரி.சி.ரி. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் செல்வி உதயனி நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினரர்களாக யு.என்.ஏச்.சி.ஆர். யாழ்.தலைமை அதிகாரி சொய்ரா றுசிபேவா, புங்குடுதீவு வடஇலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி, ஓய்வு பெற்ற மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ.எல்.ஜெ.ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரி கிரிதரன் வழங்கவுள்ளதுடன், தொடர்ந்து கலை நிகழ்வுகள், போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளது. (பா)


# விஞ்ஞான பாடத்திற்கான செய்முறைப் பட்டியல் தயாரிப்பு

(அச்சுவேலி)

தரம் 6 முதல் 11 வரையான இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் விஞ்ஞான செய்முறைத் திறன்களை மேலும் விருத்தி செய்து கொள்ளும் வகையில் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான விஞ்ஞான செய்முறைப்பட்டியல் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களைச் சேர்ந்த இடைநிலைப் பாடசாலை மாணவர்களிற்கென மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கிணங்க உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இவ் விஞ்ஞான செய்முறைப் பட்டியல் அனைத்து பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

, எதிர்காலத்தில் விஞ்ஞான பாடத்திற்கு இச்செய்முறைப் பட்டியலில் உள்ள செய்முறைகளையே வகுப்பு ரீதியாக மேற்கொண்டு அவை தொடர்பான பதிவுகள் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்டு பேணப்பட வேண்டும் என்றும், மாணவர்களின் பதிவுகள் ஆசிரியர்களினால் உடனுக்குடன் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்டிருப்பதுடன், செய்முறைப் பட்டியல் ஆய்வு கூடங்களில் கட்டாயம் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)



வேலணை - துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வின் போது ஐயனார் வித்தியாலய மாணவர்களின் "தேசபக்தி பாடலுக்கான குழு நடனம்" மற்றும் அபிநய நடனத்தையும், வேலணை ஐயனார் முன்பள்ளி சிறார்களின் குழு நடனத்தையும் காணலாம். (21)

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாளைய நம்பிக்கைகள் நீங்கள்!

இளைஞர்களே நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லிக் கொள்கிறோம். அந்த இளைஞர் சமுதாயம் சரியாக நெறிப்படுத்தப்பட்டு வளர்கிறதா என்று சந்தேகம் வருகிறது. இன்றைய இளைஞர்களைப் பார்க்கும் போது தமக்குள்ளேயே சுருங்கியவர்களாகவும், பொதுநலச் செயற்பாடுகளில் அக்கறை இல்லாதவர்களாகவும், அடுத்தவர்களோடு ஒருங்கிணைந்து செயற்படுதல் பெருமளவுக்குக் குறைந்து விட்டவர்களாகவும், சமூகமாக இயங்கும் தேடலைத் தொலைத்து விட்டவர்களாகவும் நுகர்வுக் கலாசாரத்தால் கவனச் சிதறல் ஏற்பட்டிருப்பவர்களாகவும் தென்படுகிறார்கள்.

இதை இளைய பருவத்தைத் தாண்டிவிட்டவர்கள் வழக்கமாகப் பாடும் புறணியாக எடுத்துக் கொண்டுவிடக் கூடாது. தங்களுடைய சமூகம் சார்ந்த அறிவுச் சேகரம், செயற்பாடுகள் எவையாக இருக்கின்றன என்று ஒவ்வொரு இளைஞன் யுவதியும் தங்களைத் தாங்களே கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு முந்திய தலைமுறையினரின் காலத்தில் இப்போது போன்ற மெத்தனம் இருந்ததில்லை.

இன்றைய சமூகம்சார்ந்த அக்கறை தேய்ந்திருக்கும் நிலைமைக்கு காரணங்கள் உண்டுதான். முப்பது வருடப் போர், அதன் தாக்கங்களிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் சமூக மனம், இந்த விரக்தி மனநிலையை நீடிக்க விடுவதிலேயே லாபம் காணும் அரசியலாளர்கள், ஊடகங்கள் எல்லாம் உண்டுதான். ஆனால் இளைஞர்கள்தான் முதலில் மீண்டு இதிலிருந்து வெளியே வர வேண்டும்.

எண்ணங்களையும் செயல்களையும் உரசி உரசிப் புடம் போட்டுக்கொள்ள வேண்டிய பருவம் இளமைப்பருவம். புதியன விரும்புதலும் புதுமை படைத்தலும் உற்சாகமுடன் தொற்றிக் கொள்வது இளைஞர்களிடத்தில்தான். எண்பது வயதுக் கிழவர் “இப்போது நான் மிகவும் யோக்கியனாகி விட்டேன்” என்று சொன்னால் அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? அந்த வயதில் யோக்கியமாக இருந்துவிட்டுப் போவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

வாலிபப் பருவம் அப்படியல்ல. வசந்த காலத்து மலர்களைப் போல மணக்க வேண்டியவர்கள்; இலையுதிர் காலத்து மரங்களைப் போல வாடியே இருந்துவிடாதீர்கள். வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையுமே இளமையின் சொத்து. கையில் வைத்திருக்கும் காசை பஸ்ஸில் பிக்பொக்கெற் காரனிடம் பறிகொடுத்து விட்டாலும், சோகம் இல்லாமல், பிக்பொக்கெற் காரனின் சாமர்த்தியத்தை வியந்து பேசும் மனசு இருபதுகளின் வயது.

சமூகத்தின் மீதான கவனமும், அடுத்தவர்கள் பற்றிய அக்கறையும் கொண்டு, தவறான பழக்கங்கள் படிந்துவிடாமல் தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொள்ள வேண்டிய காலம் இளமைக்காலம். நம்மிடம் எந்தவிதமான தவறுகளும் இல்லை என்கிறபோது நம்மீது நமக்கே ஒரு மரியாதை வரும். நமக்கு நம்மை மதிக்கத் தோன்றும்.

நாம் யாருக்கும் தாழ்ந்தவர்களில்லை. அதுபோல, நம்மை விடத் தாழ்ந்தவர்கள் என்றும் யாருமில்லை. எல்லோரும் ஏதோ ஒருவகையில் முக்கியமானவர்களே. நமக்குத் தெரியாதவற்றில் ஏதோ ஒன்று, இன்னொருவருக்குத் தெரிந்திருக்கலாம் என்ற உணர்விருந்தால், மோதல்கள் இல்லை காழ்ப்புகள் இல்லை வெறுத்து விலகுதல் இல்லை.

நம்மைச் சுற்றியிருப்பவர்களை நேசிப்பதும், மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நாம் மற்றவர்களுக்குச் செய்வதும்தான் மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

தங்களின் ஈகோவிற்கு எந்த அடியும் விழாதபடி மாற்றங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது இளைஞர்களால் மட்டுமே முடிந்த ஒரு காரியம். அதைச் செய்யுங்கள் இளைஞர்களே! மாற்றம்தான் பிரபஞ்சத்தின் தாளகதி. - ஆசிரியர்

# விவசாய கடனை மீளச்செலுத்த இலங்கை வங்கியால் காலநீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவசாயக் கடன்களை மீளச் செலுத்தும் காலத்தினை நீடிக்க இலங்கை வங்கி இணங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கி விவசாயக் கடனை மீளச் செலுத்தும் காலத்தை நீடிக்க தீர்மானித்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளதாகவும் எவ்வளவு காலத்திற்கு நீடிப்பது என்பது தொடர்பில் இறுதித்தீர்மானம் எடுக்கவில்லை என்றும் இலங்கை வங்கியின் வடபிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். கடந்த வருடம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக 13,075 ஏக்கர் விவசாய நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது. இதன்காரணமாக விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனால், விவசாயிகள் தாம் விவசாய நடவடிக்கைக்காக வங்கியில் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதால் விவசாயக்கடனை மீளச்செலுத்தும் காலத்தை நீடிக்கவேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (02)

# இலங்கைக்கு விஜயம் செய்வதென்ற ஐ.நா.வின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான கோரிக்கையை ஐ.நா.அதிகாரிகள் விடுத்த நிலையில் அவர்களின் கோரிக்கை காலங் கடந்த ஒன்றெனக் கூறி கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரப் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி பிரான்க் லா ரூ விடுத்த கோரிக்கையே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள் ளது. 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானத்தின் அடிப்படையில் ஐ.நா.விசேட பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்ததாகவும், அந்தக்கால வரையறை பூர்த்தியடைந்துள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனை, ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவினாத் ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 19-2 தீர்மானத்தின் அடிப்படையில் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்யக் கோருவதில் பயனில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாஸ்முறை நீக்கப்படவில்லை யாழ்.மீனவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு கடலில் மீன் பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை இன்றுவரை தளர்த்தப்படவில்லை.

இந்தப் பாஸ் நடைமுறையை நீக்குவதாக வடமாகாண கடற்படைத் தளபதி வாக்குறுதியளித்த போதும் அது இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்று யாழ். மாவட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 7ஆம் திகதி பொன்னாலைப் பகுதியில் உள்ள மீனவர் சமூகத்திற்கிடையிலான கலந்துரையாடலின் போது வடமாகாண கடற்படைத்தளபதி அல்மிரல் உடவத்த, கடலில் மீன் பிடிப்பதற்கான பாஸ் நடைமுறையினை நீக்குவதாகக் கூறியிருந்த போதும் உள்ளூர் கடற்படை அதிகாரிகள் பாஸ் நடைமுறையினை மேற்கொண்டு வருவதனால் மீனவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவதாக மேற்படி மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மாதகல், குருநகர் மற்றும் வேலணைப் பிரதேசத்தில் உள்ள கடற்படையினர் பாஸ் நடைமுறையினை கடைப்பிடிப்பதாகவும், வடமாகாண கடற்படைத் தளபதியின் வாக்குறுதி இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாஸ் நடைமுறையுள்ளதால் கடலுக்குச் செல்வதும், தொழில் மேற்கொள்வதில் காலக்கெடு கடைப்பிடிக்கப்படுவதாலும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவதாக யாழ். குடாநாட்டு மீனவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (25)

# யாழில் கண்டுபிடிக்கப்பட்ட தேள் நாடுமுழுவதும் பரவும் அபாயம்

## பேராதனைப் பல்கலை பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கடும் விஷத்துடன் கூடிய தேள் நாடளாவிய ரீதியில் பரவும் அபாயம் நிலவுவதாக பேராதனைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணம், பலாலி, காரைநகர், அச்சுவேலி ஆகிய கரையோரப் பிரதேசங்களில் இந்தத் தேள் இனம் பரவியுள்ளமை ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் கே.பி.ரணவன தெரிவித்துள்ளார்.

இந்தியன் ரெட் கோபியன் எனப்படும் இந்த தேள் இனம் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்தியாவின் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் இந்த தேள் இனம் அதிகம் காணப்படுகின்றமையும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தேள் இனங்கள் இந்தளவு விஷத்தை கொண்டிருக்கவில்லை என பேராசிரியர் கே.பி.ரணவன தெரிவித்துள்ளார்.

இந்தத் தேள் கொட்டி 24 மணித்தியாலங்களுக்குள் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் இருதய கோளாறு ஏற்படலாம் என வைத்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். புதிய தேளின் விஷத்தை பிள்ளைகளால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதால் இதன் கொட்டுக்கு இலக்காகும் பிள்ளைகள் அநேகமான சந்தர்ப்பங்களில் உயிரிழப்பதாக இந்தியத் தகவல்களை மேற்கோள்காட்டி பேராதனைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

உயிராபத்தை ஏற்படுத்தும் இந்தத் தேள் இனத்தை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாக பேராசிரியர் கே.பி. ரணவன குறிப்பிட்டார்.

தற்போது யாழ். குடாநாட்டின் கரையோர பகுதிகளில் காணப்படுகின்ற இந்தத் தேள் இனம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் துரிதமாக பரவலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இந்த வருடம் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் தேள் கொட்டியதால் சுமார் 80 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 10 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக சுகாதாரத் தரப்பு தெரிவித்துள்ளது.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10.30 மணிக்கு சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

## வரதர் கட்டுரையிலிருந்து

ததே.கூ.இன் தலைமையிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு அரசாங்கம் போதிய நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு த.தே.கூட்டுத் தலைவர்களால் அடிக்கடி எழுப்பப்படுகிறது.

அத்துடன் தமிழர்களுக்காக வெளிநாடுகள் வழங்கும் பணங்களை எல்லாம் அரசாங்கம் சிங்களப் பகுதிகளுக்குத் திசைதிருப்பி விடுகின்றது என்று பொத்தம் பொதுவாக பகிரங்கக் குற்றச்சாட்டு த.தே.கூதினரால் அடிக்கடி முன்வைக்கப்படுகின்றது. இந்தக் கருத்து இலங்கையில் உள்ள தமிழ் மக்களை மட்டும் குழப்பவில்லை, தமிழக மக்களையும் குழப்புகிறது. இந்தியா இலங்கைத் தமிழர்களுக்காக வழங்கும் உதவிகள் தொடர்பாகவும் இப்படிப்பட்ட அபிப்பிராயமே தமிழகத் தலைவர்கள் மத்தியிலும் பரவலாக விதைக்கப்பட்டு தமிழக மக்கள் மட்டத்தில் பிரபல்யமாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்களுக்கு எதிரான மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக சற்றுக் கூட்டி - சிறிது மிகைப்படுத்திக் கூறுவதால் தமிழர்களுக்கு என்ன நட்டம் எனச் சிலர் நினைக்கக் கூடும்.

உண்மையில் அவ்வாறான மிகைப்படுத்திய பிரசாரங்களால் மறுபுறமாக தமிழகத்தில் எழுப்பியுள்ள வாதப் பிரதிவாதங்கள் இந்திய அரசுக்கு எதிரான ஒரு பிரசாரமாகவே ஆகியிருக்கின்றது.

இந்திய அரசின் அரசியற் தலைவர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் மட்டத்தில் இதன் விளைவு என்னவாக ஆகியிருக்கிறதெனில், இலங்கைத் தமிழர்களுக்கென வழங்கும் உதவிகளெல்லாம் இந்திய மத்திய அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாகவே அமைகின்றன.

ஏன் இந்த வீண் தொல்லை?


அப்போது தமிழர்களுக்கு ஓர் அரசியற் தீர்வு ஏற்பாட்டை உருவாக்கித் தருவதற்கென இந்தியப் படைகளை அனுப்பி 1500இற்கு மேற்பட்டவர்களை சாகக் கொடுத்தும் இலங்கை மற்றும் தமிழகத் தமிழர்களிடமிருந்து கடைசியில் கெட்ட பெயர்தான் மிஞ்சிக் கிடைத்தது.

இப்போது இலங்கைத் தமிழர்களின் புனர்வாழ்வு தமிழர் பிரதேசங்களின் புனர்நிர்மாணம் என 5000 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட உதவிகளை தமிழர்களுக்கு வழங்குகிற போதும் அதே கெட்ட பெயர்தான் எஞ்சிக் கிடைக்கிறது என்ற எண்ணப்பாட்டையே உருவாக்கி வளர்த்திருக்கிறது.

இப்போதெல்லாம் இலங்கைக்கு உதவி செய்யும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் அடிக்கடி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நேரடியாகச் சென்று பார்ப்பதுடன் அந்தந்த இடங்களில் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து விபரங்களை அறிந்தே வருகின்றார்கள்.

வெளிநாட்டுத் தூதுவர்களும், மேலை நாடுகளிலிருந்து விஜயம் செய்யும் அரச உயர் அதிகாரிகளும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களின் நிலைமைகளையும் மற்றும் அரச செயற்பாடுகள் பற்றியும் தெரிய வாய்ப்பற்றவர்கள் என்ற எண்ணத்தோடு உண்மைக்குப் புறம்பான தகவல்களையோ அல்லது மிகைப்படுத்திய வகையான தரவுகளையோ வழங்குகிறபோது தமிழ்த் தலைவர்கள் நம்பத் தகுந்தவர்கள் அல்ல என்ற பெயரை - எண்ணப்பாட்டை அந்த வெளிநாட்டவர்கள் மத்தியில் உருவாக்குவதைத் தவிர வேறெதனையும் த.தே.கூத் தலைவர்களின் பிரசாரங்கள் சாதிப்பதில்லை.

கொழும்பிலுள்ள பிரதானமான வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு ஒவ்வொரு நாளும் பொழுதும்



# உணர்ச்சிவசப்பட்ட மிகைப்படுத்தல்களால் தமிழர்க்கு எதிரான விளைவுகளே ஏற்படும்!

**மற்றவர்களையெல்லாம் தாம் கெட்டித்தனமாக, தமக்கேற்ற விதமாக பயன்படுத்த முற்படுவதாக நினைக்கும் நினைப்புகளை கட்டுப்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறும் வஞ்சக நோக்கங்களுடன் உணர்ச்சிவசப் புலுடாக்களைக் கட்டவிழ்த்து விடுகின்ற அதேபாணியில் – மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான ஆத்திர வெறியைக் கிளப்புவதற்காக உண்மைகளை மீறி மிக அதீதமான அளவில் கூட்டிக்கட்டி தகவல்களைப் பரப்பும் அதே முறையில், த.தே.கூக்காரர்கள் வெளிநாட்டவர்கள் மத்தியில் ஆதரவு தேடுவது தமிழர்களின் நலன்களுக்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.**

வடக்கு - கிழக்கில் நடப்பவை பற்றிய விபரங்களையும், நடைமுறை நிலைமைகளையும் அறிவிக்கவென அரசு-சாரா சமூக நிறுவனங்கள் பல வடக்கு - கிழக்கில் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களை நடாத்தும் பிரமுகர்களிற் பெரும்பாலானோர் தேர்தற் காலத்தில் தமிழர்கள் அனைவரும் த.தே.கூவுக்கே வாக்குகளை அளிக்க வேண்டுமென ரகசியமாக அதேவேளை காத்திரமாக பிரசாரம் செய்கின்றனர். அந்தவகையில் இந்த நிறுவனங்கள் தேர்தல் விடயத்தில் த.தே.கூவுக்கே பெரும்பாலும் ஆதரவாக உள்ளன.

ஆனால், இந்த நிறுவனங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் தமிழர்கள் மத்தியில் உள்ள எந்த அரசியற் தலைமை மீதும் விசுவாசம் கொண்டவர்களல்ல. அத்துடன் த.தே.கூவினரால் அரசியல் ரீதியாக ஏதும் சாதிக்கப்படும் என நம்பிக்கை உடையவர்களுமல்ல.

நடைமுறையில் இந்த நிறுவனங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் மத்தியில் தங்களது தனிப்பட்ட சமூக முக்கியத்துவத்தையும் தத்தமது நிறுவனங்கள் மேற்கொள்ளும் சேவைகளையும் பற்றிய நல்லபிப்பிராயத்தை நிலைநாட்டுவதற்காக தமிழ் அரசியற் தலைவர்களைப் பற்றிய அவநம்பிக்கைகளையே தூபமிடுகிறார்கள் - அதிலும் குறிப்பாக த.தே.கூக்.காரர்களின் அறியாமைகளையும், ஆற்றலின்மைகளையும், இயலாமைகளையும், உட்கட்சிப் பிளவுகளையும் தருணங்கள் தவறாது விலாவாரியாக விளக்கி - பரப்பி விடுகின்றனர்.

அதற்கு த.தே.கூக்காரர்களின் மிகைப்படுத்தல்கள் நிறைந்த அறிக்கைகளும் வெளிநாட்டுத் தூதர்கள் மத்தியில் அவர்கள் நேரடியாக வழங்கும் வாக்குமூலங்களில் காணப்படும் தப்பான தரவுகளும் மற்றும் பிழையான தகவல்களும் த.தே.கூக்காரர்கள் பற்றிய எதிர்வினையான அபிப்பிராயங்களை உறுதிப்படுத்துபவையாக உள்ளன.

த.தே.கூக்காரர்களின் அறிக்கைகளையும் பேச்சுக்களையும் நம்பி எந்தவொரு சபையிலும் அவற்றை இலங்கை அரசுக்கு எதிரான விவாதங்களில் பயன்படுத்த முற்படுபவர்கள் அந்தச் சபைகளில் மொக்கேனப்படும் நிலைக்கே உள்ளாவார்கள் என்ற நிலையையே த.தே.கூக்காரர்கள் நிலைநாட்டியிருக்கிறார்கள்.

மற்றவர்களையெல்லாம் தாம் கெட்டித்தனமாக தமக்கேற்ற விதமாக பயன்படுத்த முற்படுவதாக நினைக்கும் நினைப்புகளை கட்டுப்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறும் வஞ்சக நோக்கங்களுடன் உணர்ச்சிவசப் புலுடாக்களைக் கட்டவிழ்த்து விடுகின்ற அதேபாணியில் - மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான ஆத்திர வெறியைக் கிளப்புவதற்காக உண்மைகளை மீறி மிக அதீதமான அளவில் கூட்டிக் கட்டி தகவல்களைப் பரப்பும் அதே முறையில், த.தே.கூக்காரர்கள் வெளிநாட்டவர்கள் மத்தியில் ஆதரவு தேடுவது தமிழர்களின் நலன்களுக்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அதற்கு மாறாக த.தே.கூக்கார்ர்கள் உண்மை பேசுபவர்களாகவும் நேர்மையான முறையில் விடயங்களை முன்வைப்பவர்களாகவும் சரியாக-முறையாக முயற்சித்தால் இந்தியா உட்பட இலங்கைக்கு உதவி புரியும் பெரும்பாலான வெளிநாடுகளிலிருந்து நேரடியாவே உள்ளூராட்சி சபைகளின் குறிப்பிட்ட திட்டங்களுக்கு பெரும் நிதியைத் திரட்ட முடியும்.

இலங்கையின் எந்த அரச பாகத்துக்கான வெளிநாட்டு நிதியுதவியும் கொழும்பு அரசாங்கத்துக்கு ஊடாகவேதான் வந்து சேரும் என்பது ஒரு நிதி நிர்வாக சம்பிரதாயம் மட்டுமே.

எந்தவொரு வெளிநாட்டு உதவியையும் வேண்டாம் என மறுக்கும் அதிகாரம் கொழும்பு அரசாங்கத்துக்கு உண்டு.

என்றாலும் இலங்கை தொடர்பான இன்றைய சர்வதேச நிலைமையில் மக்களின் சட்டபூர்வமான பொதுநலன்கள் தொடர்பான எந்த வெளிநாட்டு உதவியையும் இலங்கை அரசாங்கம் மறுத்து விடக்கூடிய நிலையில் இல்லை.

உதவி செய்யும் வெளிநாடுகள் தமது உதவி தாம் வழங்கிய குறிப்பிட்ட திட்டத்துக்குப் பயன்படுத்தப்படுகிறதா! இல்லையா! என்பதைக் கண்காணிக்கும் உரிமை பெற்றவர்கள்.

அவ்வாறு கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

எனவே, ஒரு உதவியைத் திசை திருப்புவதை அந்த உதவி செய்த நாடே அங்கீகரித்தாலேயொழிய, குறைந்த பட்சம் தமது உதவி எங்கே செல்கிறது? எதற்காகச் செலவழிக்கப்படுகிறது? எப்படிச் செலவழிக்கப்படுகிறது? என்பன பற்றி பொருட்படுத்தாமல் இருந்தால் ஒழிய இலங்கை அரசாங்கம் தன்னெண்ணப்படி அந்த உதவியைத் திசை திருப்ப முடியாது.

இதனை இத்தனை ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் த.தே.கூக்காரர்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்றால், அது நம்பத் தகுந்ததாக இல்லை.

த.தே.கூத் தலைவர்கள் இந்தியாவினதும் மேலைத்தேச அரசுகளினதும் செல்லப்பிள்ளைகள். இந்தியா உட்பட கொழும்பிலுள்ள பிரதானமான வெளிநாட்டுத் தூதரகங்கள் அனைத்தும் த.தே.கூத் தலைவர்கள் பற்றி எவ்வளவுதான் "நெஞ்சில் உரமற்றவர்கள்", "நேர்மைத் திறனற்றவர்கள்", வாக்கில் உண்மையற்றவர்கள்.., "சாராம்சத்தில் ஏதுமற்ற வெத்து வேட்டுப் புரட்டர்கள்" என்பன போன்ற அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தாலும், த.தே.கூக்காரர்கள் மக்களால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பதாலும் இந்தியாவும் மற்றும் மேலைத் தேச நாடுகளும் மகிந்த அரசாங்கம் பற்றி அதிருப்தி கொண்டிருப்பதாலும் இந்த நாடுகள் த.தே.கூக்காரர்களுக்கு எல்லாக் கௌரவங்களையும் வழங்குகிறார்கள்.

த.தே.கூக்காரர்கள் சொல்வனவற்றை காதுகொடுத்துக் கேட்கிறார்கள்.

த.தே.கூக்காரர்களை தவறாது ஒவ்வொரு விருந்துக்கும் அழைக்கிறார்கள்.

த.தே.கூக்காரர்களைத் தங்கள் நாடுகளுக்கு அரச விருந்தினர்களாக அழைத்து இலங்கை அரசின் செயற்பாடுகள் பற்றியும் தமிழர்களின் நிலை பற்றியும் கருத்துக் கேட்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தமது நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யும் வேளைகளில் த.தே.கூக்காரர்களோடு சந்திப்புகளையும் ஒழுங்கு செய்கிறார்கள். எந்தவொரு வெளிநாடும் த.தே.கூக்காரர்களின் அரச எதிர்ப்புப் பிரசாரங்களையோ அல்லது அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளையோ இதுவரை பகிரங்கத்தில் விமர்சித்ததில்லை.

(17ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் கலகத்தை ஏற்படுத்த தமிழக அரசியல்வாதிகள் முயற்சி

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கலகத்தை ஏற்படுத்தி, தமிழ் மக்களை இருண்ட யுகத்திற்கு இட்டுச்செல்ல தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், முன்னாள் முதல்வர் கருணாநிதியும் முயற்சிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

எமது நாட்டில் வாழும் அனைவரும் எவ்வித பாகுபாடுகளும் இன்றி ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் நாட்டுக்குள் பிரச்சினை உள்ளதாக கூறி, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் குளிர்காய முற்படுவதாக பொறியியல் சேவைகள் நிர்மாணத் துறை வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தன்னை ஒரு இனவாதியாக ஒருசில ஊடகங்கள் சித்திரிப்பதாக அமைச்சர் விமல் வீரவங்ச குற்றம் சாட்டியுள்ளார். குறித்த ஊடகங்களில் உரிமையாளர்கள் தமிழ்நாட்டிலுள்ள அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அல்லது ஏனைய உறுப்பினர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப தன்னை ஒரு இனவாதியாக சித்தரித்து காட்டுவதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதத்தை விமர்சிப்பதனால் தான் ஒரு இனவாதியா எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

# மாலைதீவு புகலிடதாரிகளை நாடுகடத்தக் கோரிக்கை



(கொழும்பு)

மாலைதீவு புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துமாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சில மாலைதீவு பிரஜைகள் தற்போது இலங்கையில் புகலிடம் கோரியுள்ளனர்.


இலங்கையில் தங்கியுள்ள மாலைதீவு பிரஜைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். சம்பிக்க ரணவக்கவினால் எழுதப்பட்ட, அல் ஜிஹாட் அல் கய்தா என்னும் நூல் வெளியீட்டு விழாவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவின் உள்நாட்டு முரண்பாடுகளினால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாட்டுக்குள் படையெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக மாலைதீவில் இடம்பெற்று வரும் பதற்ற நிலைமை காரணமாக தெஹிவளை, ரத்மலானை, நுகேகொடை போன்ற பிரதேசங்களில் பெருமளவிலான மாலைதீவுப் பிரஜைகளைக் காணமுடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்களுக்கு உத்தியோகபூர்வமாக இதுவரையில் மாலைதீவு எவ்வித பதிலையும் வெளியிடவில்லை.

# தொப்பி, பர்தாவை அணிவிக்க முஸ்லிம்களின் முயற்சி பலனளிக்காது



(கொழும்பு)

ஹலால் தேவையென்றால் அல்லாஹ் உள்ள நாட்டுக்குச் செல்லவும் என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் தலைக்கு தொப்பி வைத்தாலோ, பெண்கள் பர்தா அணிந்தாலோ அதில் தவறில்லை, எனினும், எங்களுக்கும் தொப்பியும் பர்தாவும் அணிவிக்க முயற்சித்தால் அதனை ஏற்க முடியாது. ஹலாலிற்கு பௌத்தர்களோ, பௌத்த பிக்குகளோ எதிர்ப்பை வெளியிடவில்லை.

எதிர்ப்பை வெளியிட வேண்டிய அவசியமும் கிடையாது. ஹலால் பேரில் இடம்பெறும் துர்நடத்தைகளையே நாம் எதிர்க்கின்றோம்.

முஸ்லிம் கலாசாரத்தை, இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை ஏனைய இன சமூகத்தின் மீது திணிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதன் போது வழங்கப்பட்ட உதவிகளை ஹலால் ஹறாம் என முஸ்லிம்கள் வகையிடு செய்து பெற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல விடயங்கள் நிறைவேற்றவுள்ளதால் இளைஞர்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும்

## – அழைப்புவிடுக்கிறது பொதுபலசேனா

ஹலால் பிரச்சினை தற்போது முடிந்து விட்டது. நாங்கள் இதன் பின் ஹலால் தொடர்பில் பேசமாட்டோம். எனினும் எங்களுக்கு இன்னும் சில விடயங்கள் தொடர்பில் செய்ய வேண்டியவை இருக்கின்றன. அவற்றை முன்னெடுப்பதற்கு ஹலால் சான்றிதழை ஒழிக்க ஒத்துழைப்பு வழங்கியதைப் போன்று இதற்கும் இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கண்டி நகரில் மத்திய சந்தைக்கு முன்னால் இடம்பெற்ற பொதுபலசேனாவின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பாரிய ஒரு வெற்றியை பெற்றபின் இன்று நாங்கள் கண்டி நகருக்கு வந்துள்ளோம். எங்களுக்கு அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் ஆசீர்வாதமும் ஸ்ரீதலதா மாளிகையின் புனித சின்னத்தின் ஆசீர்வாதமும் கிடைத்துள்ளன.

கடந்த சில வருடங்களாக எவ்வித சட்ட பூர்வமான அதிகாரமும் இல்லாமல் மக்களை ஏமாற்றிக் கொண்டு ஹலால் சான்றிதழ் வழங்கிய பொய்க்கார ஜம் இய்யத்துல் உலமா சபைக்கு எதிராக நாங்கள் போர்க் கொடி பிடித்தோம்.



எங்கள் போராட்டம் வலுப்பெற்ற பின் உலமா சபையின் போக்கு மாறிவிட்டது. அவர்கள் குர்ஆனுக்கு அப்பால் சென்று ஹலால் சான்றிதழை வழங்கி உள்ளதை நாங்கள் சவால் விட்ட போது உலமா சபை விலகி நின்றது.

அவர்கள் ஹலால் சான்றிதழை பாதுகாக்க, ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்கள், மல்வத்த அஸ்கிரிய பீடங்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், கல்விமான்கள் உட்பட பலரிடம் சென்ற போதும் அவர்களது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் நாங்கள் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், உளவுப் பிரிவின் உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் சந்தித்து ஹலால் பற்றிய எமது நிலைப்பாட்டை விளக்கினோம். அதே நேரம் உலமா சபை தமது நிலைப்பாட்டை நாளுக்கு நாள் மாற்றியது. ஹலால் சான்றிதழுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை என அறிந்த உலமா சபை அதனை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியது. அரசு அதனை நிராகரித்தது.

இறுதியில் வேறு வழியின்றி ஹலால் சான்றிதழ் வழங்கும் தமது செயற்பாட்டை உலமா சபை நிறுத்திக் கொண்டது.

ஹலால் தற்போது முடிந்த பிரச்சினை. நாங்கள் இதன் பின் ஹலால் சம்பந்தமாக பேசமாட்டோம். இருந்த போதும் எங்களுக்கு இன்னும் பல விடயங்களை தொடர வேண்டியுள்ளது. அவற்றையும் முன்னெடுப்பதற்கு, ஹலால் சான்றிதழை ஒழிக்க வழங்கிய பங்களிப்பு போன்று, இதற்கும் இளைஞர்கள் உட்பட பொது மக்களது ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.எனத் தெரிவித்தார்.

# 7262 பேருக்கு டெங்குத்தொற்று

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 7262பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகி உள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்கு மாகாணத்திலேயே பெருமளவானவர்கள் இந்த நோய்த்தொற்றுக்கு இலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சல் ஏற்பட்டு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நீடிக்குமேயானால் உடனடியாகவே மருத்துவ உதவியை நாடுமாறும் மக்களுக்கு தொற்றுநோய்த்தடுப்புப் பரிவு அறிவுறுத்தியுள்ளது.

# ஐ.தே.க.வுடன் புது முன்னணியா? வதந்திகள் என்கிறார் ரில்வின்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசாங்கத்திற்குமிடையே உண்மையாக நடந்ததை இரகசியங்களை மூடி மறைப்பதற்காக, ஒருபோதும் தோற்றம்பெறாத புதியதொரு முன்னணி பற்றிப் பொய்ப் பிரசாரங்கள் பரப்பப்பட்டுவருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவும், ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து புதியதொரு முன்னணியை ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்தே இவ்வாறு அமைக்கவுள்ளதாக தெரிவித்த டில்வின் சில்வா வங்குரோத்து அரசியல் கட்சி இவ்வாறான பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அழிவின் அரைப்பகுதிக்குப் பதில் சொல்ல வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியே, அந்தக் கட்சியுடன் மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் கைகோர்க்காது. எமது கட்சி துன்பத்தில் துவள்வோருக்காக புத்திஜீவிகளைக் கொண்டு முன்னணிக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு ஆயத்தமாகி வருகிறது.

அதற்கான பேச்சுவார்த்தைகள் சிறப்பாக நடைபெற்று வருவதுடன், வதந்திகளைப் பரப்புவோர் கூடிய விரைவில் உண்மை எதுவென்பதைக் கண்டுகொள்வார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தரப் பரீட்சைக்கு 30 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

எனவே பரீட்சார்த்திகள் காலங்கடத்தாது தமது விண்ணப்பங்களை விரைவாக அனுப்புமாறு அவர் தெரிவித்துள்ளதுடன், எக்காரணம் கொண்டும் விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாதெனவும் தெரிவித்தார்.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொய்யுள்



— மூலபாரதி

### மண்டேக்கை!

முன்னை வந்த செவியை
பின்னை வந்து கொம்பும்
என்ன செய்த தென்று
எல்லாம் நன்கு தெரியும்!

வந்தே றுகுடி என்னும்
வார்த்தை பிரயோகித்தல்
சொந்தப் புத்தி இல்லார்
சொல்லக் கேட்டு முள்ளோம்!

இலங்கை எந்தக் கொம்பும்
இன்னும் பிறக்க வில்லை
அந்நாள் சொன்ன மாதிரி!
அப்ப மண்டேக்க இருக்கா?

## முரசின் இன்றைய பலன்

**19.03.2013 - செவ்வாய்க்கிழமை)**

நந்தன வருஷம் பங்குனி மாதம் 06 ஆம் திகதி.
நட்சத்திரம் மிருகசீரிடம் சித்தம் இரவு 1.25 வரை. திதி ஸ்ப்தமி
முற்பகல் 9.35 வரை. இராகுகாலம் 3.18 - 4.48 வரை.
சுபநேரம் 10.48 - 12.18 வரை. கரிநாள்.


சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனம் மகிழும் நிகழ்வுகள். பணியில் சுறுசுறுப்பு. உழைப்பு துணை நிற்கும். நல்லவர் உதவி. அறப் பணி ஈடுபாடு. உறவினர் வருகை. பணவரவு. |
| ரிஷபம் | சமூகத்தில் உயர்மதிப்பு. பாராட்டு, எதிர்பார்த்த செய்தி வரும். தொழில் சிறந்து, அதிக பணவரவு. குடும்ப தேவைகள் நிறைவேறும். |
| மிதுனம் | ஆறுதல் தேடும் மனநிலை. வரவை விடசெலவு கூடும். நண்பர், குடும்பத்தினரிடமிருந்து ஆதரவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| கடகம் | திட்டமிட்ட பணிகளில், மாற்றம் நேரிடும். புதிய நட்பு உருவாகும். தொழில், இடையூறு கவலை. உல்லாச செலவுகளில் நாட்டம். வாகன பயணத்தில் கவனம். |
| சிம்மம் | பொது நலப்பணிகளில் ஆர்வம். தொழிலில் புதிய உத்தி. பணவரவும், நன்மையும். வழக்கு வெற்றி. நட்பினால் உயர்வு. மாணவர் தேர்ச்சி. |
| கன்னி | குளறுபடிகள் ஏற்படும். வெறுப்பை பிறரிடம் வெளிப்படுத்த வேண்டாம். போக்குவரத்தில் கவனம். பணவரவு சுமார். கூடுதல் உழைப்பு தேவை. |
| துலாம் | எதிர்கால நலன் பற்றிய அக்கறை. தொழில் குறுக்கீடுகள் வரும். விவேகம் கைகொடுக்கும். அளவான பணவரவு. சேமிப்பு. |
| விருச்சிகம் | கூடுதல் வளம் பெற அனுகூலம். உறவினர் நண்பரிடம் நல்மதிப்பு. தொழில் இலக்கு நிறைவேறும். தேவையான பணவரவு. மங்கல நிகழ்ச்சி திட்டம். |
| தனுசு | பேச்சு, செயலில் புத்திசாதுர்யம். தொடங்கும் வேலை எளிதாக நிறைவேறும். வளர்ச்சி மன மகிழ்வைத் தரும். தனலாபம். எல்லோர்க்கும் உதவுவீர்கள். |
| மகரம் | கணவன்-மனைவிக்குள் நெருக்கம். திடீர் முழவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். நட்பு வட்டம் விரியும். உடல் நலம் சீராகும். |
| கும்பம் | நல்ல செயல்களில் ஆர்வம். நண்பர்களிடம் வரவேற்பு. தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். பகையறிந்து விலகுதல் நன்மை. |
| மீனம் | மனதில் இனம் புரியாத சஞ்சலம். எதிரானவர் களிடம் விலகி, சிரமம் தவிர்க்கலாம். தொழில் மாற்றமில்லை. பணவரவு ஓரளவு. |

# வறிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் அமைச்சர் டக்ளஸ்

## - இ.போ.ச வட பிராந்திய பொதுமுகாமையாளர்

(யாழ்ப்பாணம்)



நீதியான நேர்மையான சிறந்த உள்ளம் கொண்ட மனிதர் என்பதுடன் இன மத பேதங்களுக்கு அப்பால் மக்களுக்கான சேவைகளை சிறப்புடன் ஆற்றுபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் அஸ்ஹர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இ.போ.சபையின் நடத்துனர்களுக்கான நியமனப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிடைக்கப் பெற்றுள்ள இந்த நியமனங்களின் ஊடாக இவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு அமைச்சர் ஒளியேற்றி வைத்துள்ளார். எனவே இந்த வாய்ப்புகளைப் பெறும் நீங்கள் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுடன் நேசமாகவும், பாசமாகவும் பழகும் அதே வேளை, சமயத் தலைவர்கள், முதியவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்பதுடன், நிர்வாகத்திற்கு கீழ்ப்பணிந்து நடக்க வேண்டும் தவறான வழியில் நடந்து கொள்ளாமல் நீதியான, நேர்மையான வழியைப பின்பற்றி அதனூடாக சமூகத்திற்கான சேவையை செய்ய முன்வர வேண்டுமெனத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தர் உரையாற்றுகையில், கிடைக்கப் பெற்றுள்ள இந்த நியமனங்கள் ஊடான வேலைவாய்ப்பினை செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கு இணங்க உண்மையாகவும், விசுவாசமாகவும் செய்ய வேண்டும்.

அத்துடன் நிர்வாகத்திற்கு கீழ்ப்படிந்து பணிபுரியும் அதேவேளை, சக உத்தியோகத்தர்களுக்கு மதிப்பளிக்கவும், நேசிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். தவறுகளுக்கு ஒருபோதும் துணைபோகக் கூடாது என்றும் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறும் வகையில் மக்களுக்கான சேவைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். அத்துடன், பயணிகளுடன் அன்பாகப் பழகும் அதே வேளை, நீங்கள் நாணயமுள்ளவர்களாகவும், முன்மாதிரியான வர்களாகவும், நடந்து கொள்ள வேண்டும் எனவும்கேட்டுக் கொண்டார்.

நியமனப் பத்திரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் அஸ்ஹர், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் வழங்கி வைத்தனர்.

# நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா

(கிளிநொச்சி)

வரலாற்றுச் சிறப்புமிக்க புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி பகல் இரவாக நடைபெறவுள்ளது.

இதில் இன்று விளக்கு வைத்தல் நிகழ்வுடன் ஆரம்பிக்கும் பொங்கல் விழா தொடர்ந்து 8 நாட்கள் பூசை வழிபாடுகள் இடம்பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொங்கல் இடம்பெறும்.

பண்டைய மரபுப்படி மீசாலை புத்தூர் சந்தியில் இருந்து பண்டமெடுக்கும் வைபவம் ஆரம்பமாகி ஆனையிறவு, பரந்தன், கண்டாவளையூடாக ஆலயத்தை சென்றடையும். இப்பொங்கல் விழாவையொட்டி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (160)

# சேவைநலன் பாராட்டு

(அச்சுவேலி)


இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளராகக் கடமையாற்றி பிரதிப் பொது முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற கே.ஈ.டீ.சுமணசிறியின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையில் நடைபெற்றது.

இக்கௌரவிப்பு நிகழ்வின் போது விழாநாயகருக்கு வங்கியாளர்கள், வாடிக்கையாளர்களினால் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் வாழ்த்து மடல்களும் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வின் போது சிறுவர்களுக்கான ‘மலரும் பொன்னரும்பு’ கணக்கிற்குரிய பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு பல்வேறு துறைகளையும் சார்ந்த பல அறிஞர்களும், பெரியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (03)

# பக்தி சிரத்தையுடன் இடம்பெற்ற மகாசிவராத்திரி

(காரைநகர்)



காரைநகர் 48 றோட் கிழவன்காடு சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய சுற்றாடல் பகுதி இளைஞர்களால் சிவராத்திரி தினத்தன்று நித்திரை விழிப்புக்காக கிராம வீதிகள் தோறும் சுவாமிப் படங்கள் தாங்கிய சப்பறத்தை இழுத்துச சென்று தேவபாராயணம் செய்வது வழமையாக இடம்பெற்று வருகிறது.

இம்முறையும் கடந்த சிவராத்திரி தினத்தன்று அப்பகுதி மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட புதிதாக மரத்தினால் செய்யப்பட்ட சப்பறத்தில் சுவாமிப் படங்களை வைத்து மின்சார விளக்குகள் பொருத்தி கிராம வீதிகளினூடாக அவ்வூர் இளைஞர்கள் இழுத்து வந்து பக்தி சிரத்தையுடன் சிவராத்திரியை கொண்டாடினர். (50)

## வருண பகவானின் சதி

(வெலிங்ரன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணியின் வெற்றிவாய்ப்பு மழையுடன் கரைந்து சென்றது.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நியூசிலாந்தின் வெலிங்ரனில் நடைபெற்றது. இதில் நான்காம் நாள் ஆட்டம் மழை காரண-மாக கைவிடப்பட்ட நிலையில், ஐந்தாம் நாள் ஆட்டமும் மழை காரணமாக முற்றாகக் கைவிடப்பட்டது. இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வி யின்றி நிறைவடைந்தது. இங்கிலாந்து அணிக்கு வெற்றிபெற்றுக் கொள்வ தற்கான வாய்ப்பு இருந்த நிலையில் மழையால் அது கரைந்து போனமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 465. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 254. இரண்டாவது இனிங்ஸ் 162/2

## இறுதிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலை காலிறுதிப் போட்டிகள் நடைபெறும் எனவும், இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மத்திய மகாவித்தியாலய அணி மோதவுள்ளது.இரண்டாவது போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து முதலாவது காலிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியும் மோதவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள் ளனர். தொடர்ந்து மூன்றாமிடத்திற்கான போட்டியும், இறுதிப் போட்டியும்இடம்பெறும் என்றும்,இறுதிப்போட்டிக்கு கொழும் புத்துறை இந்து மகாவித்தியாலய அணி தகுதிபெற்றுள்ள தாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (42)

# தொடர் இந்தியா வசம்




(மொகாலி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மொகாலி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி போராடி வென்றதுடன் தொடரையும் கைப்பற்றிக் கொண்டது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று மொகா லியில் நிறைவடைந்தது.

இதில் 91 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி, புவனேஸ்வர குமார், ஜடேஜா ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியது. இருப்பினும் ஒரு முனையில் ஹியூஸ் சிறப்பான முறையில் ஆடியபோதும், அவருக்கு துணையாக எவரும் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹியூஸ் 69, ஹடின் 30, ஸ்ரார்க் 35, கிளார்க், ஸ்மித் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புவனேஸ்வர குமார், ஜடேஜா தலா மூன்று, அஸ்வின், ஓஜா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 36 ஓவர்களின் 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணிக்கு, அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சாளர்கள் கடும் நெருக்கடியைக் கொடுத்து விக் கெட்டுக்களைச் சாய்த்தனர். ஆட்டமிழந்தவர்கள் சரசாரியாக ஓட்டங்களைப் பெற்றமையால் இந்திய அணியால் போராடியே வெற்றிகொள்ள முடிந்தது. இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங் ஸிற்காக 33.3 ஓவர்களை எதிர்கொண்டு நான்கு விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் முரளி விஜய் 26, புஜாரா 28, ஹோலி 34, சச்சின் டெண்டுல்கர் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.ஆட்டமிழக்காது டோனி 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பீற்றர் சிடில், நதன் லயன் தலா ஒவ்வொரு விக்கெட்டைச் சாய்த்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக அறி முக வீரர் தவான் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் இந்திய அணி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 408. இந்தியா முதல் இனிங்ஸ் 499. முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை,பங்களாதேஷ் அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக் கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட் டுள்ளது.

23ஆம்திகதி ஆரம்பிக்கவுள்ள தொட ருக்கான 16 பேர் கொண்ட குழாமே இலங்கை கிரிக்கெட் சபையால் அறி விக்கப்பட்டுள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன தனது உபாதையிலிருந்து குணமாகாததன் காரணமாக இக்குழாமில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அத்தோடு ஆரம்பத்துடுப்பாட்ட வீர ரான திலகரட்ண டில்சானுக்கு உடற் தகுதிப் பிரச்சினைகள் காணப்படுவதால் அவர் முழுமையான உடற்தகுதியை அடைந்தால் மாத்திரம் இத்தொடரில் பங்குபெறவுள்ளார்.

இத்தொடருக்கான இலங்கை அணி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை என்னது என இலங்கை கிரிக்கெட் சபை தேர் வாளர் தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சண் டிமால், திலகரட்ண டில்சான், குஷால் ஜனித் பெரேரா, குமார் சங்கக்கார, லஹிரு திரிமன்ன, ஜீவன் மென்டிஸ், திஸர பெரேரா, நுவான் குலசேகர, லசித் மலிங்க, சச்சித்திர சேனநாயக்க, உபுல் தரங்க, கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, ஷமிண்ட எரங்க, சச்சித்திர பத்திரன.

# சாதனையுடனான வெற்றி




(ஜோகனஸ்பேர்க்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி சாதனையுடன் கூடிய வெற்றியைப் பதிவாக்கியுள்ளது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் இடையிலான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஜோகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி முதல் 15 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 51 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அம்லா, டிவில்லியர்ஸ் இணை மிகச் சிறப்பாக பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டது. இந்த ஜோடியைப் பிரிக்க பாகிஸ்தான் பல. வழிகளிலும் முயற்சி செய்தபோதும் சாதனை முறியடிக்கப்படும் வரை அது சாத்தியமாகவில்லை. மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 300 ஓட்டங்களை இலகுவாக கடந்தது. ஒரு நாள் போட்டியில் 3ஆவது விக்கெட்டுக்கு ஓர் ஜோடியின் அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையாக இது அமைந்தது.இதற்கு முன்பு 1999ஆம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக இந்தியாவின் டெண்டுல்கர், ராவிட் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 237ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. இந்த 14 ஆண்டுகால சாதனை முறியடிக்கப்பட்டது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 343 ஓட்டங்களைக் குவித்தது. இதில் அம்லா 113 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 122, கப்டன் டிவில்லியர்ஸ் 108 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 128 மற்றும் டுபிளிஸர் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மொகமட் இர்பான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 344 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில்களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும் நிலைத்து நின்று . எவரும் ஆடவில்லை. அத்துடன் ஒரு முனையில் சிறப்பான முறையில் ஆடிய அப்ரிடிக்கு ஓர் வலுவான இணைப்பாட்டத்தை வழங்க முடியவில்லை. இதன் காரணமாக பாகிஸ்தான் அணியால் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற முடிந்ததே ஒழிய வெற்றிகைகூடவில்லை. இறுதியில் பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அப்ரிடி 48 பந்துகளை எதிர்கொண்டு ஏழு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங் கலாக 88 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹபீஸ் 57, வஹாப் ரியாஸ் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொற்சோ, மைக்லாரன் தலா மூன்று, ரொபின் பீற்றர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகர்களாக அம்லா, டிவில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இதேவேளை, வழக்கமாக தென்னாபிரிக்க வீரர்கள் பச்சைநிற உடை அணிந்து விளையாடுவார்கள். ஆனால் இந்த ஆட்டத்தில் பிங்க் நிற உடையுடன் களம் இறங்கினர். மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக்காக அவர்கள் பிங்க் உடையுடன் ஆடியதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.4ஆவது ஒரு நாள் போட்டி டர்பனில் வருகிற 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## ஷரபோவா, நடால் சம்பியன்





(கலிபோர்னியா)

பரிபாஸ் ஓப்பன்ரென்னிஸ் தொடரில், ரஷ்யாவின் மரியா ஷரபோவா மற்றும் ஸ்பெயினின் நடால் ஆகியோர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

அமெரிக்காவின் இந்தியனா வெல்ஸ் நகரில், பி.என்.பி., பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை 6-2, 6-2 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று, கடந்த 2006இற்கு பின் இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.


இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் 5ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் மார்டின் டெல் பெட்ரோவை சந்தித்தார். இதன் முதல் செட்டை 4-6 என நடால் கோட்டைவிட்டார். பின் எழுச்சி பெற்ற நடால் இரண்டாவது செட்டை 6-3 என வென்று பதிலடி கொடுத்தார்.வெற்றியாளரைத் தீர்மானிக் கும் மூன்றாவது செட்டை, நடால் 6-4 என தன்வசப்படுத்தினார்.

இரண்டு மணி 29 நிமிட போராட்டத் திற்கு பின் ஸ்பெயினின் நடால்,4-6, 6-3, 6-4 என்ற செட்களில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

# பங்களாதேஷ் மீண்டும் தடுமாற்றம்

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான கொழும்பு டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி மீண்டும் தடுமாறி வருகின்றது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை



இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. மேலும் 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணியின்முதல் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது. இறுதியில் இலங்கை அணி முதல் இனிங்ஸிற் காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 139, குலசேகர 22, எரங்க 12, சண்டிமால் 102 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹசி மூன்று, ருபல் ஹசன், ஆர். இஸ்லாம் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 106 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் பங்களாதேஷ் அணி, ரங்கண ஹேரத்தின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின்றது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, பங்களாதேஷ் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓடடங்களைப் பெற்றுள்ளது. இதில் தமிம் இக்பால் 59 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் ரங்கன ஹேரத் மூன்று விக்கெட்டுக்களைச் சாய்த்தார். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி 52 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிப் பதிவுகள்...



பூநகரி மகாவித்தியாலயம் (112)



கிளிநொச்சி மகாவித்தியாலயம்





சென். சாள்ஸ் வித்தியாலயம் (54)



பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்





கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்



ஈவினை அ.த.க. பாடசாலை



நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்



மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயம் (43)

# ஐ.நா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தைப் பகிஸ்கரித்த முதல் நாடாக இஸ்ரேல் 'சாதனை'!




ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்துள்ள மற்றுமொரு தீர்மானம் குறித்தே, இலங்கை அரசுக்கெதிரான பெரும்பாலான ஊடகங்கள் பெருமளவு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

ஆனால் இந்த ஊடகங்கள் இவ்வருடம் ஜனவரி மாதம் 29ஆம் திகதி, இதே மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில், இஸ்ரேல் சம்பந்தமான கூட்டத்தில் அந்த நாடு கலந்து கொள்ளாமல் பகிஸ்கரித்ததின் மூலம், அவ்வாறான ஒரு செயற்பாட்டைச் செய்த, உலகின் முதல் நாடு என்ற "சாதனை"யை நிலைநாட்டியுள்ளதைக் கண்டும் காணாதது போல இருந்து வருகின்றன.

மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளும் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை, தங்கள் நாடுகளில் நிலவும் மனித உரிமை நிலவரம் சம்பந்தமான பொறிமுறை அறிக்கையை (Universal Periodic Review) வழங்கி வருவது வழமை. மேற்படி பேரவையிலேயே இம்முறை இஸ்ரேல் பங்குபற்றாது தவிர்த்துக் கொண்டது.

இஸ்ரேல் அந்தக் கூட்டத் தொடரில் பங்குபற்றியிருந்தால், தனது நாட்டில் மனித உரிமைகள் எவ்வாறு பேணப்படுகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் உலகில் மனித உரிமையை மிக மோசமாக மீறும் நாடுகளில் ஒன்றான இஸ்ரேலுக்கு, அதற்கான தார்மீகப் பலமோ அல்லது நேர்மையோ இல்லாத படியினாலேயே, அது இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளாது தவிர்த்துக் கொண்டுள்ளது.

தங்களுக்கென்று ஒரு நாடு இல்லாமல் இருந்த யூதர்களுக்கு, ஏகாதிபத்திய சக்திகள் மத்திய கிழக்கில் தமது தேவைகளுக்காக பாலஸ்தீனர்களின் நிலங்களைப் பறித்தே ஒரு நாட்டை உருவாக்கிக் கொடுத்தன. அதன் பின்னர் இஸ்ரேலிய சியோனிச அரசு, ஆக்கிரமிப்பு யுத்தங்கள் மூலமும், இராணுவ நடவடிக்கைகள் மூலமும் பாலஸ்தீனர்களின் பெருந்தொகையான நிலங்களை மேலும் அபகரித்து, இலட்சக்கணக்கான பாலஸ்தீன மக்களை அவர்களது சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக்கி, அவர்கள் மீது மிக மோசமான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தி வருகிறது.

2006இல் மனித உரிமைப் பேரவை செயற்படத் தொடங்கியதிலிருந்து, அதன் பெரும்பான்மையான அங்கத்துவ நாடுகளால் அதன் மனித உரிமை மீறல்களுக்காகத் தொடர்ச்சியாகக் கண்டிக்கப்படும் நாடாக இஸ்ரேலே இருந்து வருகிறது.

அமெரிக்காவும் வேறு இரண்டொரு நாடுகளும் மட்டுமே இஸ்ரேலை ஆதரித்து வருகின்றன. அமெரிக்கா சொல்லும் சில புத்திமதிகளைக் கூட இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லாத நிலையிலேயே இருந்து வருகிறது. இந்த நிலையில், பாலஸ்தீன மக்களின் மனித உரிமைகளை முற்றாக நசுக்கிக்கொண்டு, இஸ்ரேல் அரசு உலகை நீண்ட காலத்திற்கு ஏமாற்றிக் கொண்டும், பகைத்துக் கொண்டும் இருக்கமுடியாது என்பதே உண்மையாகும்.

அமெரிக்கா போன்ற இஸ்ரேலின் நட்பு நாடுகள், தமது நண்பனான இஸ்ரேலிய சியோனிச அரசின் மோசமான மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தத் திராணியற்ற நிலையில், இலங்கை போன்ற சிறிய நாடுகளின் மனித உரிமை விவகாரங்களை மட்டும் விடாப்பிடியாகவும், தொடர்ச்சியாகவும் நோண்டி வருவது அரசியல் உள் நோக்கத்துடனானது என எண்ணுவதில் தவறேதும் இருக்க முடியாது.

(தீப்பொறி இதழிலிருந்து)

# கை கழுவும் பெண்!



மலேசியாவைச் சேர்ந்த யூலியா என்ற பெண், அங்குள்ள மருத்துவ சோதனைக் கூடத்தில் வேலை பார்த்து வந்தார். சோதனைகளின்போது, அடிக்கடி, தன் கைகளை கழுவும் பழக்கம், இவருக்கு ஏற்பட்டது. இந்தப் பழக்கம், படிப்படியாக அதிகரித்து, ஒரு நாளைக்கு, குறைந்தது, 300 தடவையாவது, கைகளை கழுவும் அளவுக்கு, அவர் அடிமையாகி விட்டார். இதனால், அவரது, உள்ளங்கைகள் அரித்துப் போய் விட்டன. ஆனாலும், இந்த வினோத பழக்கத்தை, அவரால் கைவிட முடியவில்லை. இதையடுத்து, அவர், வேலையை விட்டும் நீக்கப்பட்டு விட்டார். அவருக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில், யூலியா, ஒருவித மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக, அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

# பிழையின்றித் தமிழ் 5

**- ஞானச்செல்வன் -**



**வல்லெழுத்து மிகா இடங்கள்**

**1.** அது, இது, எது முன் மிகாது.
(எ-டு) அது பெரிது, இது சிறிது, எது கரும்பு?

**2.** அவை, இவை, எவை முன் மிகாது.
(எ-டு) அவை சென்றன, இவை கண்டன, எவை தின்றன?

**3.** அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு?
(எ-டு) அவ்வாறு சொன்னார், இவ்வாறு செப்பினார், எவ்வாறு கண்டார்?

**4.** ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்களின் முன் மிகாது.
(எ-டு) ஒரு கோடி, இரு தாமரை, அறுபதம், எழுசிறப்பு.

**5.** பல, சில முன் மிகாது.
(எ-டு) பல சொற்கள், சில பதர்கள், பல தடைகள், சில கனவுகள்.

**6.** உகர ஈற்று வினையெச்சங்கள் முன் மிகாது.
(எ-டு) வந்து சென்றான், நின்று கண்டான்.

**7.** அத்தனை, இத்தனை முன் மிகாது.
(எ-டு) அத்தனை குரங்குகள், இத்தனை பசுக்களா?
குறிப்பு: அத்துணை முன் மிகும்.
(எ-டு) அத்துணைப் பெயர்களா? இத்துணைச் சிறப்பா?

**8.** பெயரெச்சம் முன் மிகாது.
(எ-டு) ஓடாத குதிரை, வந்த பையன், பறந்த புறா
குறிப்பு: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் முன் மிகும்.
(எ-டு) ஓடாக் குதிரை, பாடாத் தேனீ

**9.** என்று, வந்து, கண்டு முன் மிகாது.
(எ-டு) என்று சொன்னார், வந்து சென்றார், கண்டு பேசினார்.

வல்லொற்று மிகுமிடங்கள், மிகாவிடங்கள் அனைத்தும் ஈண்டு உரைக்கப்படவில்லை. சுருக்கமான பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. இதனில் வரும் சில இலக்கணச் செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

வேற்றுமை உருபுகள் (2 முதல் 7 (முடிய) விரிந்து (வெளிப்படையாக) இருப்பின் வேற்றுமை விரி எனப்படும். நூலைக் கற்றான் - இதில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பாடாக உள்ளது.

உருபு மறைந்துவரின் வேற்றுமைத் தொகை எனப்படும். பால் பருகினான் - இதில் பாலைப் பருகினான் எனும் பொருள் புலப்பட்டாலும் ஐ என்னும் உருபு மறைந்துள்ளது.

ஒரு வினைச் சொல் நிற்க, அது பொருள் நிறைவு பெறாமல் இருந்து, வேறொரு வினைச் சொல் கொண்டு நிறைவுற்றால் அது வினையெச்சம். (எ-டு) வந்து (முற்றுப் பெறாத வினை) நின்றான் என்ற வினைமுற்றைக் கொண்டு நிறைவு பெறும். இதுபோல் முற்றுப் பெறாத வினை. ஒரு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் எனப்படும். வந்த (முற்றுப் பெறாத வினை) பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. இந்த வகையான பெயரெச்சத்தில் ஈற்றெழுத்து (வினையின் கடைசி எழுத்து) இல்லாமற் போயிருந்தால் (கெட்டிருந்தால்) அது ஈறு கெட்ட பெயரெச்சம் அதுவே எதிர்மறைப் பொருளும் (இல்லை என்பது) தருமானால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(எ-டு) உலவாத் தென்றல் - உலவாத தென்றல் என்பதில் "த்" என்னும் ஈற்றெழுத்துக் கெட்டு (இல்லாமற் போய்) உலவா என நின்று "த்" வல்லொற்றுடன் கூடி உலவாத் தென்றல் ஆயிற்று. தென்றல் உலவும் (அசையும்) இது உலவாத (அசையாத) என்னும் எதிர்மறைப் பொருள் தருதல் காண்க.

ஆறு தொகையுள் ஒன்று பண்புத் தொகை. பண்பு உருபு ஆகி மறைந்து கெட்டிருக்கும். "மை" விகுதியும் கெட்டிருக்கும். (எ-டு) செந்தாமரை- இதனைச் செம்மை ஆகிய தாமரை என விரித்தல் வேண்டும். இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையாக வரின் அது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும். (எ-டு) வட்டக்கல் - வட்டமாகிய கல். கல்லே வட்டம். வட்டமே கல்.

# அன்பு நிபந்தனைகள் அற்றது

— சிலி எழுத்தாளர் இசபெல் ஆலெண்டே.




ஆன்ம உலகமென்பது நன்மை, தீமை என எதுவுமே இல்லாத ஒரு இடம். நம் கண்களுக்குக் கறுப்பும் வெள்ளையுமாகத் தெரியும் உண்மையான உலகம் போன்றதல்ல அந்த உலகம். அங்கே கண்டிப்பான விதிகளென்று எதுவுமில்லை. ஆன்மவுலகில் செயல்நோக்கம் மட்டுமே உள்ளது. அது இருக்கிறது, அவ்வளவுதான். அங்கே நன்மை, தீமை என்ற உணர்தல் இல்லை. அங்கே நீங்கள் எதிலும் முடிவெடுக்க வேண்டியிருக்காது. விஷயங்கள் இருக்கின்றன, அவ்வளவுதான், நீங்கள் அங்கே இருக்கிறீர்கள், அவ்வளவுதான். அதுவும் மிக, மிக மென்மையான தன்மையில். ஆன்ம உலகில் இனம் அல்லது வயது ஒரு கேள்வியாக இல்லாததைப் போலவே பால்வகைப்பாடும் ஒரு கேள்வியாக எழ வாய்ப்பில்லை. எனக்கு அது மிக்க பாதுகாப்பான ஒரு இடம். அந்த இடத்திலிருந்துதான் கதைகள் வருகின்றன. அதுவே அன்பின் இருப்பிடம்.

இது காலத்துக்கு ஒவ்வாததாக, மிகப் பொருத்தமற்றதாகத் தோன்றலாம். ஆனால், அன்பு, வன்முறை என்ற இரண்டு விஷயங்கள் எனக்கு மிகமிக முக்கியமானதாக என் வாழ்க்கையைத் தீர்மானித்திருக்கின்றன. துயரம், வலி, வேதனை, மரணம் எல்லாமே இருக்கின்றன, ஆனால் அதற்கு மற்றொரு இணையான பரப்பில் வேறொன்று இருக்கிறது. அதுதான் அன்பு. அன்பின் வடிவங்கள் பலவாக இருக்கின்றன. ஆனால், நான் குறிப்பிடுவது நிபந்தனையற்ற அன்பு. உதாரணமாக, நாம் மரத்தை நேசிப்பது போன்றது. மரம் நகர்ந்திருக்க வேண்டுமென்றோ, அல்லது எதையாவது செய்யவேண்டுமென்றோ, அல்லது அழகாயிருக்கவேண்டுமென்றோ நாம் எதிர்பார்ப்பதில்லை. மரம் என்பது வெறுமனே மரம். அது மரம் என்பதால், அதை நாம் நேசிக்கிறோம். அந்த வகையிலேயே நீங்கள் ஒரு விலங்கினை நேசிக்கிறீர்கள். அதே வகையில்தான் நாம் குழந்தைகளை நேசிக்கிறோம். உறவு மேலும் மேலும் சிக்கலானதாக மாறும்போதுதான், அதிகம் எதிர்பார்த்து அதிகமாகக் கேட்கிறோம். உங்கள் அன்புக்கு மாற்றாக அல்லது ஏதோ ஒன்று வேண்டுமென்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்களோ அதே அளவுக்கு நீங்களும் நேசிக்கப்பட வேண்டுமென எதிர்பார்ப்புகளும் விருப்பங்களும் உங்களிடம் இருக்கின்றன.

அன்பின் உலகமாக இருக்கிற அந்த ஆன்ம உலகில் நிபந்தனைகள் இல்லை. என் பேரன், பேத்திகளை நான் நேசிக்கின்ற அதே வகையிலான அன்பைச் சொல்கிறேன். அவர்கள் மிகச்சரியாக இருப்பதாக நான் எண்ணுகிறேன். அவர்கள் வளர்கிறார்களா அல்லது அப்படியே இருக்கிறார்களா என்பது ஒரு பொருட்டில்லை. ஏனென்றால், அவர்கள் வயதுவந்தவர்களாக, பெரியவர்களாக ஆனபின்பும், அவர்கள் பிறந்தபோது கைகுழந்தைகளாக எப்படியிருந்தார்களோ, அப்படியே அவர்களை என்னால் நோக்கமுடியும். ஆன்மாவுக்கு வயது இல்லை. நான் சொல்ல விரும்புவது அதைத்தான் என நினைக்கிறேன். நாம் ஒன்றை ஆழமாகவும் முழுமையாகவும் நேசிக்கும்போது, நாம் அதன் சாராம்சத்தை நேசிக்கிறோம்.

# தற்கொலை செய்துகொள்வது எப்படி?

- அதிஷா -




குளித்துமுடித்து "கடவுளே இந்தப்படமாவது நல்லாருக்கணும்.. இந்தவருஷம் பூரா அலெக்ஸ்பாண்டியன் தொடங்கி ஆதிபகவன் வரைக்கும் நமக்கு ஏழரை சனி புடிச்சு ஆடுது.. இப்படியே போனா படம் பார்த்துப் பார்த்து கண்ணு ரெண்டும் அவிஞ்சிடும் போலிருக்கு.. இந்தப் படமாவது நெஞ்சுக்கு நிறைவா இருக்கணுமே?" என்று வேண்டிக்கொண்டு திரையரங்குக்கு செல்கிறீர்கள்.

பார்க்கிங் 45, டிக்கட் 100, பாப்கார்ன் 50 என கொண்டுபோன 200ஐ பிடுங்கிக்கொண்டு பெரிய மனதோடு மீதி 5ரூபாயை கொடுக்கிறார் தியேட்டர்காரர். அந்த ஐந்து ரூபாயை பொக்கிஷமாக வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டு அவருடைய பெருந்தன்மையை நினைத்து வியந்து பொக்கெற்றில் போட்டுக்கொள்கிறீர்கள். படம் தொடங்க பத்து நிமிடம் முன்பே உள்ளே போய் ஜபர்தஸ்தாக அமர்ந்தும் விடுகிறீர்கள்.

உங்கள் பக்கத்தில் ஏதோ ஒரு கெட்ட வாடை வருகிறது. சகிக்க முடியாத துர்நாற்றம். இடதுபக்கம் திரும்பிப் பார்த்தால் அருகில் ஒரு கடுங்குடிகாரர். அவர் உங்களையே உற்று உற்று பார்த்துக்கொண்டிருக்கிறார். உங்களுக்கு எரிச்சலாக இருக்கிறது. ஆத்திரத்தோடு திட்டுவதற்கான எண்ணங்கள் உங்கள் ஆள்மனத்திலே உண்டாகிறது. அது அவனுடைய போதைக்கு பயந்து வெளிமனதில் அடங்கிவிடுகிறது. வாயை மூடிக்கொண்டு திரையில் ஓடுகிற விளம்பரங்களை ரசிக்கிறீர்கள்.

வாயில் பீடாவும் பான்பராக்கும் போட்டு குதப்பிக்கொண்டேயிருக்கிறார் குடிகாரர். அதை புளிச் புளிச் என உங்கள் மேல் சாரல் அடிக்கிற வகையில் முன்சீட்டின் பின்புறம் துப்புகிறார். துர்நாற்றம் வேறு! போதாக்குறைக்கு வண்டி வண்டியாக கமெண்ட் அடித்துக்கொண்டேயிருக்கிறார். உங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வேறு ஒரு காலி இடத்தில் சென்று அமர்ந்துகொள்கிறீர்கள்.

அந்த சாத்தான் விடாமல் துரத்திக் கொண்டு வந்து உங்கள் பக்கத்தில் மீண்டும் அமர்ந்துகொள்கிறது. நீங்கள் அவரை பார்க்காதது போல அமர்ந்து படத்தில் கவனத்தை செலுத்துகிறீர்கள். ஆனால் அந்த நபர் உங்களுடைய தோளைத் தட்டி கூப்பிடுகிறார். "சா......ர்... சார்.. உங்களைத்தான் சா....ர்"

"திரும்பி மட்டும் பார்த்திடாதடா கோவாலு" என்று நினைத்தபடி திரையையே பார்க்கிறீர்கள்.

"என்னசார் சரக்கு விக்கிறானுங்க.. போதையே இல்ல.. நீங்களாவது கேக்கக் கூடாதா" என்கிறார். பேசாமல் இருக்கிறீர்கள்.

மீண்டும் உங்களுடைய பின்மண்டை அல்லது பிடரியில் தட்டி.. "நீங்களாவது கேக்கக் கூடாதா சார்" என்கிறார்.

"நான் யாருங்க இதையெல்லாம் கேக்க.."

"கேக்கணும்சார்.. ஒவ்வொரு குடிமகனும் கேக்கணும்.." என்கிறார்.

"சார் எதுக்கு என்கிட்ட வம்புபண்றீங்க.."

"இல்ல சார் உங்களைப் பார்த்தா ரொம்ப டீசன்டா இருக்கு.... அதனாலதான்.."

"சார் படம் பார்க்க வந்திருக்கேன் ப்ளீஸ் தொந்தரவு பண்ணாதீங்க.."

"நாங்க என்ன வடை சுடவா வந்திருக்கோம்.. இல்ல சார் நீங்க கேக்கணும்சார்.. இதையெல்லாம் தட்டிக்கேக்கணும் சார்.."

"என்னங்க நீங்க.. நான் மனேஜர்கிட்ட கம்ப்ளைன்ட் பண்ண வேண்டியிருக்கும்"

"அத தாண்டா நானும் சொல்றேன்.. டே நீ கேக்கலேன்னா வேற யாருடா.. கேப்பா.. கேளுடா.. இப்ப கேளு.. போடா போயி அந்த டாஸ்மாக் மனேஜர்கிட்ட கேளு"

"ஹல்ல்ல்லோ.. டா போட்டெல்லாம் பேசாதீங்க.... அவ்ளோதான்"

"என்னடா.. வேணும்னா டி போட்டு பேசட்டுமா.. நீ கேளுடி.. செல்லம்.. நீ கேளுடி"

அவரை அடிக்க கையை ஓங்கும் முன்பே உங்கள் முகத்தில் பளார் என யாரோ அறைந்தது போல பிரமை. எழுந்த கை இறங்கிவிடுகிறது. ஆனாலும் உங்களுக்கோ கோபம் உச்சத்தை அடைகிறது. போய் தியேட்டர் மனேஜரிடம் புகார் பண்ண எத்தனிக்கிறீர்கள். அதற்குள்ளாகவே டிக்கட் கிழிப்பவர் வந்துவிடுகிறார். அவரிடம் நீங்கள் புகார் செய்ய.. "சார் பேசாம படம் பாருங்க சார்.." என்று டிக்கெட் கிழிப்போன் மிரட்டுகிறார்.

குடிகாரர் இப்போது முகத்தை டீசன்டாக வைத்துக்கொண்டு.. திரையில் கவனத்தைச் செலுத்துகிறார். அப்பாடா ஒழிஞ்சது சனியன் என நீங்களும் திரையை பார்க்கிறீர்கள். படம் தொடங்குகிறது. முதல் காட்சி.. பவர் ஸ்டார் கோணல் மாணலாக முகத்தை வைத்துக்கொண்டு.. ஈஈஈஈஈஈ என்று சிரிக்கிறார். காமெடியாம். பிறகு அவர் டான்ஸ் ஆட ஆட..

உவ்வ்வேக்... குடிகாரர் உங்கள் மீது வாந்தி எடுத்தும் விடுகிறார். இந்த முறை உங்களுக்கு கோபம் உச்சகட்டத்தை நெருங்குகிறது. நேராக போய் மனேஜரிடமே கம்ப்ளைன்ட் செய்கிறீர்கள்.

இந்த முறை கடுங்குடிகாரர் வெளியேற்றப்படுகிறார். ஆனால் அவரோ போகும்போது உங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே போகிறார். "நான் உனக்காக வாசல்லயே வெயிட் பண்ணுவேன்.. நீ வா வெளியே.. டேய் உன்னை சும்மா விடமாட்டேன்டா" என்று சிரிக்கிறார்.




உங்கள் கண்களில் ஆனந்த கண்ணீர் பொங்குகிறது.

"சார் நீங்க என்ன சார் டிஸ்டர்ப் பண்ணினீங்க.. உள்ள ரெண்டரைமணி நேரம் கேப் விடாம அவனுங்க பண்ணானுங்க பாருங்க டார்ச்சர்.. அதைவிட இதெல்லாம் ஒன்னுமேயில்ல சார்.. உண்மைல நீங்க தெய்வம் சார்.. நீங்க ஒருத்தர்தான் சார் என்மேல வாந்தி எடுத்தீங்க.. ஆனா உங்களுக்கு பயமாக இருந்தாலும்.. காட்டிக்கொள்ளாமல் கழிவறை போய் உடைகளை கழுவி... சுத்தம் பண்ணி..

மீண்டும் திரையில் பார்வையை திருப்பி.. படத்தில் கவனத்தை குவிக்கிறீர்கள்.

இரண்டரை மணிநேரத்துக்கு பிறகு... படம் முடிகிறது. வெளியே அந்த குடிகாரன் உங்களுக்காகவே காத்திருக்கிறான். இப்போது போதை தெளிந்திருக்கிறது. "சார் சாரி சார்.. உங்களை நான் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டேன்.. என்னை மன்னிச்சிடுங்க.. நேத்துதான் இந்தப்படம் பார்த்தேன்.. அந்த கடுப்புலதான் கன்னாபின்னான்னு குடிச்சிட்டேன்.. அதான் இப்படியெல்லாம் நடந்துகிட்டேன் போல.. ஐயாம் வெரி டீசன்ட் ஃபெலோ ஒன்லிசார்.. சீ மை கிரெடிட் கார்ட் டெபிட்கார்ட்" என்று அமைதியாக பேசுகிறான்.

உள்ள ஒரு பத்து இருபது பேர் படம் எடுக்கிறேன்னு.. முடியல சார்.. எனக்கு தலையெல்லாம் சுத்துது.. லேசா பைத்தியம் பிடிக்கறாப்ல இருக்கு.. ஒரு கட்டிங் சாப்டுவமா" என்று சொல்ல.. தூரத்தில் டாஸ்மாக் உங்களுக்காகவே மட்டமான சரக்குடன் வாவா என்கிறது.

**STATUTORY WARNING -**

**புகைப்பழக்கம் புற்றுநோயை உண்டாக்கும்**

**குடி குடியை கெடுக்கும் குடும்பத்தை அழிக்கும் - ஆனால்**

**ஒன்பதுல குரு போன்ற படங்கள் அதை விட ஆபத்தானவை.**

# சர்வதேச விமானத்தளமாக தரம் உயரவுள்ளது பலாலி

பலாலி விமானத்தளத்தை சர்வதேச விமானத் தளமாக தரமுயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சிவில் விமானப் போக்கு வரத்து அமைச்சு அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விமானத்தள அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியாவின் உதவியை நாட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வடக்கின் அபிவிருத்திப் பணிகள் அரசினால் தற்போது மிக வேக மாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பலாலி விமான நிலையம் சர்வதேச விமானத் தள மாக தரமுயர்த்தப்படும் பட்சத்தில், வடபிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு இது பாரிய உந்துசக்தியாக அமையும் என அரசு கருதுவதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பலாலி விமானத்தளம் தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளது. தற்போது இந்த விமானத் தளம் இராணுவ விமானப்படைத் தளமாகவே பெரும்பாலும் செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த விமானத் தளத்தை சர்வதேச விமானத் தளமாக தரமுயர்த்தும் நோக்கில் அதனை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு கையேற்கத் திட்டமிட்டுள்ளது.

பலாலி விமானத்தளம் சர்வதேச விமான நிலையமாக புனரமைப்புச் செய்யப்படுமிடத்து இங்கிருந்து இந்தியாவுக்கு அதிகளவான விமான சேவைகள் இடம்பெறும் சாத்தியம் உள்ளது.

வடபகுதியைச் சேர்ந்தவர்களே அதிகமாக இந்தியா சென்று வரும் நிலையில், இந்த மக்களின் போக்குவரத்து சேவையை இலகுபடுத்து வதற்கு இந்த விமான நிலைய விஸ்தரிப்பு உதவியாக அமையும் என அரசு கருதுவதாகவும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சக அலுவலக வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் திருவையாறுக்கு ஏற்று நீர்ப்பாசனம்

நீண்ட காலத்தின் பின்னர், இரணைமடு குளத்தில் இருந்து திருவையாறு மக்களுக் கான மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

கடந்த கால போர் நடவடிக்கைகள் கார ணமாக இரணைமடுவிலிருந்து திருவையாறுப் பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் கைவிடப் பட்டிருந்தது. இதனால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது.

இந்ந நிலையில்,தற்போது யுத்தம் முடிவுற்று மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் மீண்டும் அப்பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசனத்தை வழங்கு வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றது.

இது தொடர்பான கூட்டமொன்று அண்மை யில் திருவையாறு விவசாயிகளுக்கும் இரணை மடு நீர்ப்பாசன பொறியியலாளர்களுக்கு மிடையில் திருவையாறில் இடம்பெற்றது. இதன்போது திருவையாறுக்கான நீர்விநியோக வாய்க்கால்கள் நீண்டகாலமாக புனரமைக்கப் படாமையால் அவற்றை புதிதாக நிர்மாணம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் குறித்த வாய்க்கால்களை பொறி யியலாளர்கள் ஆய்வு செய்ததாகவும் அவற் றில் பெருமளவானவை நல்லநிலையில் உள்ள துடன், சேதமடைந்த பகுதிகளை மட்டும் திருத் தம் செய்யவுள்ளதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

திருவையாறுப்பகுதிக்கான நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுமிடத்து பெருமளவான குடும்பங்கள் நன்மையடையுமெனத்தெரிவிக் கப்படுவதுடன், பெருமளவில் விவசாய செய் கையும் மேற்கொள்ளப்படும். தற்போதே பெரு மளவானவர்கள் வாழை உட்பட்ட பயிர்களை செய்கை பண்ணுவதில் ஆர்வம் காட்டிவரு கின்றனர்.

பெரும்பாலும் இவ்வருட இறுதியில் இந்த நீர்விநியோகப்பணிகள் மேற்கொள்ளப்படு மெனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் அக்கராயன் பிரதேசத்திற்கான ஏற்று நீர்ப்பாச னம் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

# கரும்புச் செய்கையாளருக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கல்



கிளிநொச்சி, ஆனைவிழுந் தான் பகுதியில் கரும்புச் செய் கையில் ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பு நிதியுதவி கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது.

அக்கராயன்,ஸ்கந்தபுரம், ஆனை விழுந்தான் ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 23 கரும்புச் செய்கையாளர்களுக்கு தலா 10,000 ரூபா நிதியுதவி காசோலை கள் மூலமாக வழங்கப்பட்டன.

மேலும், இவர்களுக்கு இலவச மாக கிருமிநாசினியும் பசளை யும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு ஆராய்ச்சிச் சபையின் அனுசரணையுடன் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற் கான திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. இதற்கமைய கரும்புச் செய்கையில் ஈடுபடு கின்ற பயனாளிகள் தெரிவுசெய் யப்பட்டு கரும்பு உற்பத்தி தொடர் பான பயிற்சிகளும் அவர் களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதற்கான நிகழ்வில் நாடா ளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கரும்பு ஆராய்ச்சிச் சபையின் தலைவர் சிறில்சுது வெல்ல, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கரும்பு ஆராய்ச் சிச் சபையின் தலைவர் சிறில் சுதுவெல்ல உரையாற்றுகையில், "இந்நடவடிக்கையின் முதற் கட்டமாக கடந்த வருடம் கண் ணகைபுரத்தில் 7 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்க ளுக்கு உள்ளீடுகளும் பசளை மருந்து உள்ளிட்ட விளைச் சலுக்கான பொருட்களும் இலவ சமாக வழங்கப்பட்டன. அத்து டன் நிலப் பண்படுத்தலுக்காக தலா பத்தாயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன.

இப்பயனாளிகளினால் சிறப் பாக மேற்கொள்ளப்பட்ட கரும் புச் செய்கையின் விளைவாகப் பெறப்பட்ட உள்ளீடுகளைப் பயன படுத்தி மேலும் ஒருதொகுதி உற்பத்தியாளர்கள் தெரிவுசெய் யப்பட்டுள்ளனர். இவர்கள் தற் போது உற்பத்தியில் ஈடுபடுத்தப பட்டுள்ளனர், இத்திட்டமானது, உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டு மேலும் கரும்பு உற்பத் தியா ளர்களைத் தெரிவுசெய்து அவர்களையும் கரும்புச் செய் கையில் ஈடுபடுத்துவதேயாகும். இதற்கான கொடுப்பனவுகளே இன்று வழங்கப்பட்டன. இவ் வாறு சுமார் 100 பயனாளிகளை கரும்புச் செய்கையில் தொடர்ச் சியாக ஈடுபடுத்துவதே இத்திட் டத்தின் நோக்கமாகும்.

இதனடிப்படையில் இத்திட் டம் எதிர்பார்க்கின்ற இலக்கை எட்டுகின்ற நிலையில் இப்பகு தியில் சர்க்கரை ஆலையொன்றை அமைப்பதற்கான மூலப்பொருளை பெற்றுக்கொள்ள முடியும். இச் சாதகத்தன்மையைப் பயன் படுத்தி சர்க்கரை ஆலையினை அமைப்பதே இத்திட்டத்தின் இறுதி இலக்காகவும் அமையும் என்றார்

# கொழும்பு சென்ற பஸ் தாக்குதலுக்கு இலக்கானது

(கொடிகாமம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியாருக்குச் சொந்தமான பேருந்து மீது இக்கிரிகொல் லாவ பகுதியில் வைத்து தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு 11 மணியளவில் இடம்பெற்ற இச சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

யாழிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு குறித்த பேருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை, இக்கிரி கொல்லாவ பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது சாரதியின் பக்க மாக இருந்த கண்ணாடிகள் உடைந்து சேதமாகின எனினும் பயணிகள் எவருக்கும் காயமேற் படவில்லை.

சாரதியின் சாதுரியத்தால் பஸ் நிறுத்தப்படாமல் சென் றதனால் மேலதிக தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இந்தத் தாக்குதலினால் பேருந் திற்குள் இருந்த பயணிகள் அச் சமடைந்து காணப்பட்டனர். (130)

# பௌத்த மதத்தை இழிவுபடுத்த பச்சை குத்தப்படவில்லை – பிரிட்டன் பிரஜை தெரிவிப்பு

பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் பச்சை குத்தியி ருக்கவில்லை என பிரித்தானிய சுற்றுலாப் பயணி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய சுற்றுலாப்பயணி ஒருவர் விமானநிலையத்தில் வைத்தே நாடு கடத்தப்பட்டிருந்தார். பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் செயற்பட்டதாகத் தெரிவித்து இவ்வாறு அவர் நாடு கடத்தப் பட்டிருந்தார்.

நொட்டிங்ஹாமைச் சேர்ந்த அன்டனி ராட்கிலிப் (வயது 41) என்பவரே இவ்வாறு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கைகளில் புத்தரின் உருவச் சிலையை பச்சை குத்தியிருந்தது உண்மை எனவும், மதத்தை மதிக்கும் வகையிலேயே தாம் இதனைச் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் போது பௌத்தமதத்தை இழிவுபடுத்தும் வகையில் ராட்கிலிப் கருத்து வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், விசாரணைகளின் போது தாம் மௌனம் காத்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

# தீர்மானம் நிறைவேறினாலும் இலங்கைக்கு பாதிப்பில்லை என்கிறார் அரியம் எம்.பி.



ஜெனிவாவில் அமெரிக்க அர சாங்கத்தினால் கொண்டுவரப் படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காவிட்டாலும் அவை நிறைவேற்றத் தேவையான வற்றை அமெரிக்கா செய்யும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் இருந்து ஏனைய மாநிலங்களுக்கு பரவிவரும் மாணவர்களின் போராட்டம் காரணமாக இந்தியா இலங் கைக்கு சார்பாக செயற்படமுடி யாத நிலையேற்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவுக்கு சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவில் கலந்து கொண்டு தற் போது நாடு திரும்பிய நிலை யில் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக அமெ ரிக்கா கொண்டுவரவுள்ள தீர் மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்காவிட்டாலும் அமெரிக் காவின் தீர்மானம் வெற்றி பெறும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தியா வில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழல் ஒருபோதும் இந்தியாவை இலங்கைக்கு சார்பாக வாக்க ளிக்கச்செய்யும் என்று தான் நம்ப வில்லையெனவும் தெரிவித்தார்.

உலக நாடுகள் இந்த தீர் மானம் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதை தாங்கள் அறியக்கூடியதாக வுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் எதிர்வரும் 22ஆம் திகதி ஜெனிவாவில் இடம்பெறும் வாக்கெடுப்பே தீர் மானிக்கும் எனத் தெரிவித்த அவர், இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டா லும் அது இலங்கையை பெரி தளவில் பாதிக்கும் என்று நாங் கள் கருதவில்லை.

தீர்மானம் நிறைவேற்றப்பட் டால் இம்முறையும் மீண்டும் ஒரு தடவை காலக்கெடு இலங் கைக்கு வழங்கப்படும் நிலையே ஏற்படும். தமிழர்களுக்கு ஐ.நா. வில் இதன்மூலம் ஒரு தீர்வு கிடைக்கும் என்றால் அது நீண்ட நாட்கள் செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்

# மாகாணங்களுக்கிடையிலான தொடர்பாடலை விளையாட்டின் மூலம் விருத்தி செய்ய ஏற்பாடு





(யாழ்ப்பாணம்)

'அண்மைக் காலமாக வடமாகாணத்தில் விளையாட்டுத்துறை அபரிமிதமான ஊக்கத்தை அரசிடமிருந்து பெற்றுள்ளது. இத்திட்டதினூடாக பல பாடசாலைகள் நன்மையடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கும், ஏனைய மாகாணங்களிற்கும் இடையிலான தொடர்பினை விளையாட்டு செயற்பாடுகளினூடாக மேலும் விருத்தி செய்தல் என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண பாடசாலை மாணவர்கள் நாட்டின் ஏனைய மாகாண பாடசாலை மாணவர்களுடன் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மாகாணங்களுக்கிடையேயான தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்குடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஆளுநரின் வழிகாட்டலில் வடமாகாண கல்வித் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

வடமாகாணத்தைச் சேரந்த 20 பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களும் கிழக்கு, ஊவா, வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த 10 பாடசாலைகளின் அதிபர்களும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் இவ்வாண்டு பாடசாலை அணிகள் பங்குபற்றும் விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பான கால அட்டவணை தயாரிக்கப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு


(வவுனியா)

வடமாகாண சமூகசேவைத் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம்கட்டம், இரண்டாம்கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர் கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு, **(முன்னைய தொடர்)**

சுப்பிரமணியம் மதனமாலா (கோயில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா), விக்னேஸ்வரன் சசிகலா (கோயில குஞ்சுக்குளம், பாலமோட்டை, வவுனியா), சரவணமுத்து இலெட்சுமி (நவ்வி, பாலமோட்டை, வவுனியா), சிவகரன் துஸ்யந்தி (கோயில் குஞ் சுக் குளம், பாலமோட்டை, வவுனியா), ராஜ்குமார் நகுலேஸ்வரி(38, தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), விஸ்வநாதன் புஸ்பராணி (சாய்வீதி, மகாறம்பைக்குளம், வவுனியா), அல்லிமுத்து சுந்தரதேவி (263, தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), குலசேகரம் லட்சுமிகாந்தா (பன்றிக்கெய்தகுளம், வவுனியா), கணேஸ் யோகராணி (நவ்வி, பாலமோட்டை, வவுனியா), செல்வராசா பழனியம்மா(263, தாலிக்குளம் பூவரசங்குளம், வவுனியா), தே.ஜெகசோதி (247, தாலிக்குளம் பூவரசங்குளம், வவுனியா), இராமசந்திரன் சிந்தனைச்செல்வி (பூம்புகார் கல்மடு, வவுனியா), பேரின் பாரசா பாலேஸ்வரி (முல்லைக் குளம், கல்மடு,வவுனியா), நாகமுத்து இலட்சுமி (48, தாலிக்குளம் பூவரசங்குளம், வவுனியா), ஜெயராம் முன்னேஸ்வரி (212, தாலிக்குளம் வவுனியா), அந்தோனி ராணி (மறவன் குளம், ஈச்சங்குளம், வவுனியா), நவநீதராசா கமலா(17 4,நலன் புரிநிலையம், சிதம்பரபுரம்), முத்தையா கார்த்திகாயினி (சுந்தரபுரம்1, சாஸ்திரிகூழாங் குளம், வவுனியா). (தொடரும்)



சர்வோதயம் நிறுவனத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாற்று ஆற்றலுள்ள மாணவன் ஒருவருக்கு பாடசாலை உபகரணங்கள் தெல்லிப்பளை பிரதேச செயலரினால் வழங்கப்படுவதைக்காணலாம். (17)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின்கீழ் உள்ள தேசிய அருங்கலைகள் பேரவையில் மின்சார தொழில் வலர் பதவி (iii) ஆம் தரத்திற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகள் (பிறப்புச் சான்றிதழ், கலவிசார் சான்றிதழ்கள், தொழில் சார் சான்றிதழ்கள், மற்றும் வேலை அனுபவம் அடங்கலாக முழூமையான சுயவிபரத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர் தேசிய அருங்கலைகள் பேரவை ஜனகல கேந்ரய, தேசிய கட்டடத்தொகுதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடமுடியும்.

# பத்திரிக்கைப் பெட்டகம்

ஒரு சாமியார் ஒரு கிளி வளர்த்து வந்தார். அதற்கு பகவத் கீதை கற்றுக்கொடுத்தார். தினமும் காலை எழுந்தவுடன் ஒரு சுலோகம் சொல்லும்படி பயிற்சி கொடுத்து இருந்தார்.

பார்ப்பவர்கள் கிளியின் பக்தியை பார்த்து பரவசமடைந்து பாராட்டுவது வழக்கமாகி விட்டது.

ஆனாலும் சிவனுக்கு முக்கியத்துவம் கொடுக்க நினைத்தார் சாமியார். இன்னொரு புத்திசாலி கிளியை தேடி பிடித்தார். ஏகப்பட்ட பணம் செல்வழித்து வாங்கிய அந்த கிளிக்கு சிவபுராணம் கற்றுக் கொடுத்தார். அந்த கிளியும் நன்றாக கற்றுக்கொண்டு தினமும் காலையில் சொல்ல ஆரம்பித்தது. சாமியாருக்கு ஏக சந்தோஷம். ஆனால் சிறிய மனக்குறை. இரண்டும் ஆண் கிளிகள். ஒரு பெண் கிளியும் வளர்க்க நினைத்தார். கஷ்டப்பட்டு பெண் கிளியை வாங்கி விட்டு வீட்டுக்கு வந்தார்.

வீடு திரும்ப அதிகாலை ஆகி விட்டது. அவரது கிளிகள் கீதை, சிவபுராணம் சொல்லும் நேரம் என்பதால், வழக்கம் போல மக்கள் கூடி இருந்தனர். கிளிகள் புத்தகங்களை புரட்ட ஆரம்பிக்கையில் சாமியார் பெண் கிளியுடன் வீட்டுக்குள் நுழைந்தார். பெண் கிளியை பார்த்ததும், அந்த கிளிகள் ஸ்லோகங்களை நிறுத்தி விட்டு, விசில் அடித்தன. சாமியார் திகைத்தார். "என்ன இது" அலறினார். "தினம்தோறும் நாங்கள் செய்த பிரார்த்தனை நிறைவேறி விட்டதே... இனி எதற்கு ஸ்லோகங்கள்..சீக்கிரம் பெண் கிளியை உள்ளே அனுப்புங்கள்." என்றன. அத்தனை நாள், எந்த மன நிலையில் கிளிகள் ஸ்லோகங்கள் சொல்லி வந்தன என அப்போது தான் மக்களுக்கு புரிந்தது.

*** *** *** ***

ஒருவர் ஓவியக் கண்காட்சிக்குச் சென்றிருந்தார். அங்கே உடைவாளுடன் கம்பீரமாக சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அரசனைப் போன்ற ஓர் ஓவியம் கண்ணைக் கவர்வதாக இருந்தது. அதை வாங்குவதற்காக அந்த நபர் விலை கேட்டார். அதன் விலையை விட அவரிடம் ஐம்பது ரூபா குறைவாக இருந்தது. பேரம் பேசி ஐம்பது ரூபாயைக் குறைக்கப் பார்த்தார். ஆனால் முடியவில்லை. வீட்டுக்குத் திரும்பினார்.

மறுநாள் ஐம்பது ரூபாயைச் சேர்த்து எடுத்துக் கொண்டு ஓவியக் கண்காட்சிக்கு அவர் போனார். ஆனால் அதற்குள் வேறு யாரோ அந்த ஓவியத்தை வாங்கிச் சென்றுவிட்டார்கள். ஏமாற்றத்துடன் வெளியே வந்த அவர் நண்பரின் வீட்டுக்குப் போனார்.

என்ன ஆச்சரியம்! இவர் வாங்க நினைத்த ஓவியம், நண்பரின் வீட்டில் மாட்டப்பட்டிருந்தது.

மிகவும் ஆர்வமுடன் ஓவியத்தைப் பற்றிக் கேட்டார்.

அந்த ஓவியத்தில் இருப்பது தனது தாத்தா என்றும், தாங்கள் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும் நண்பர் கூறினார்.

தன்னிடம் நேற்று ஓர் ஐம்பது ரூபா இருந்திருந்தால் அந்த மன்னர் என் தாத்தாவாகியிருப்பார் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

*** *** *** ***

(வாழ்த்து அட்டைகள் விற்கும் கடையில் ஒர் இளைஞனும் கடைக்காரரும்)

"க்ரீட்டிங் கார்ட் இருக்கா?"

"இருக்கு"

"நான் உன்னை மட்டும்தான் காதலிக்கிறேன் என்று எழுதின கார்ட் இருக்கா?"

"இருக்கு"

"சரி, அதில ஒரு 12 கார்ட் கொடுங்க"

"???!!!"

*** *** *** ***

பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. "இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு! பேனாவும் – மையும் செலவாகாமலே எழுத முடியும். விபரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு பத்து ரூபா காசுக்கட்டளையாகவோ தபாற்கட்டளையாகவோ அனுப்பிவையுங்கள் போதுமானது" என்றிருந்தது அந்த விளம்பரம்.

இதைப் பார்த்துவிட்டு நிறையப் பேர் பணம் அனுப்பினார்கள். விளம்பரம் செய்தவர்களுக்கு ஆயிரக்கணக்கில் பணம் சேர்ந்தது. அவர்களும் விளம்பரத்தில் சொல்லியிருந்தபடியே நாணயமாக நடந்துகொண்டு, அத்தனை பேர்களுக்கும் பதில் எழுதிப் போட்டார்கள்:

"பேனா – மை செலவில்லாமலே எழுத வேண்டுமா? அப்படியானால் பென்சிலை உபயோகப்படுத்துங்கள்!" என்று.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

இரசாயனவியல்

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

*சென்றவாரத் தொடர்ச்சி...*

**ஒட்சியேற்ற நிலை**

தாண்டல் மூலகங்களின் முக்கியமான ஒரு இயல்பு பல்வேறு ஒட்சியேற்ற நிலைகளில் சேர்வைகளில் காணப்படுவதாகும். அநேகமாக எல்லா மூலகங்களிலும் +2 என்ற ஒட்சியேற்ற எண்ணைக் காணலாம். இது 4S2 இலத்திரன்களை இழப்பதால் உண்டாவதாகும். 3d இலத்திரன்களும் இரசாயனப் பிணைப்புகளில் பங்குபற்றமுடியும் என்பதால் காந்தியம் தொடக்கம் மங்கனீசு வரை ஒட்சியேற்ற நிலைகள் படிப்படியாக ஒன்று தொடக்கம் 7வரை அதிகரிக்கின்றது. ஆனால் ஒட்சியேற்ற நிலைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைகின்றது. இதற்கான காரணம் சோடி சேர்ந்த 3d இலத்திரன்களை அவற்றின் ஒழுக்கில் இருந்து அகற்றுவது கடினம் என்பதால் ஆகும். கீழே தரப்பட்டுள்ள உதாரணத்துடன் கூடிய விளக்கம் இக் கருத்துக்களை விளக்கும்.

மங்கனீசின் (Z=25) இலத்திரன் நிலையமைப்பை எடுத்துக் கொள்ளுவோம். $Is^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^6, 3ds^5, 4s^2$

| 1s | 2s | 2p | | | 3s | 3p | | | 3d | | | | | 4s |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑ | ↑ | ↑ | ↑ | ↑ | ↑↓ |

உபசக்தி மட்டங்களில் இலத்திரன்கள் நிரப்பப்படுவது படத்தில் காட்டப்படுகிறது. மங்கனீசு தாக்கத்தில் ஈடுபடும்போது இரண்டு 4S இலத்திரன்களை இழந்து $Mn^{2+}$ அயனை உருவாக்கலாம். இதற்கான ஒட்சியேற்றநிலை +2 ஆகும். இவற்றைவிட 3d உபசக்தி மட்டத்தில் உள்ள ஐந்து இலத்திரன்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை பிணைப்புகளில் பங்குபற்றினால் அதற்கேற்ப ஒட்சியேற்ற எண் மாறும்.

**விளக்க அட்டவணை (இறுதி இரண்டு உபசத்தி மட்டங்கள்)**

| ஒட்சியேற்ற எண் | பங்குபற்றும் இலத்திரன் (அம்புக்குறி அகற்றப்பட்டது) 3d | | | | | 4S | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| O | ↑ | ↑ | ↑ | ↑ | ↑ | ↑↓ | O |
| +2 | ↑ | ↑ | ↑ | ↑ | ↑ | | 2 |
| +3 | ↑ | ↑ | ↑ | ↑ | | | 3 |
| +4 | ↑ | ↑ | ↑ | | | | 4 |
| +5 | ↑ | ↑ | | | | | 5 |
| +6 | ↑ | | | | | | 6 |
| +7 | | | | | | | 7 |

**இரும்பின் இலத்திரன் ஒழுங்கை அவதானிக்கலாம்.**

| 1s | 2s | 2p | | | 3s | 3p | | | 3d | | | | | 4s |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑↓ | ↑ | ↑ | ↑ | ↑ | ↑↓ |

இதில் 4s இலத்திரன்களை இழந்தால் $Fe^{2+}$ உண்டாகும். ஒட்சியேற்ற எண் +2 ஆகும். 3d உபசத்தி மட்டடத்தில் உள்ள நான்கு ஒழுக்குகளில் இருக்கும் தனி இலத்திரன்களும் சேர்வைகள் உண்டாவதில் தனியாகவோ அல்லது பலவாகவோ பங்குபற்றுவதால் ஒட்சியேற்ற எண் +2 தொடக்கம் +6 வரை உண்டாகலாம்.

**இம்மூலகங்களில் அநேகமாக காணப்படுகின்ற ஒட்சியேற்ற நிலைகளாவன.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sc | | | | +3 | | | | |
| Ti | | | +2 | +3 | +4 | | | |
| V | | | +2 | +3 | +4 | +5 | | |
| Cr | O | | +2 | +3 | | | +6 | |
| Mn | O | | +2 | +3 | +4 | | +6 | +7 |
| Fe | O | | +2 | +3 | | | | |
| Co | O | | +2 | +3 | | | | |
| Ni | O | | +2 | | | | | |
| Cu | O | +1 | +2 | | | | | |
| Zn | | | +2 | | | | | |

இவ்வாறு அநேகமான தாண்டல் மூலகங்கள் மாறும் ஒட்சியேற்ற நிலைகளைக் காட்டுவதற்கு ஒரு முக்கியமான காரணம். தொடரான அயனாக்கற் சக்திகள் படிமுறையாக மாறுவதாகும். ஏனைய மூலகங்களுக்கு தொடரான அயனாக்கற் சக்திகளில் பெரும் திடீர் முறிவுகளை அவதானிக்கலாம்.

**உதாரணமாக:**

$$Al \xrightarrow{578} Al^{+} \xrightarrow{1811} Al^{2+} \xrightarrow{2745} Al^{3+} \xrightarrow{11540} Al^{4+} \quad KJ\,mol^{-1}$$

தாண்டல் மூலகம்

$$V \xrightarrow{648} V^{+} \xrightarrow{1364} V^{2+} \xrightarrow{2858} V^{3+} \xrightarrow{4634} V^{4+} \quad KJ\,mol^{-1}$$

தாண்டல்
மூலகம்

$Al^{4+}$ ஐ எத்தகைய இரசாயனத் தாக்கங்களினாலும் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அதற்குப் பெருமளவு சக்தி தேவைப்படும்.

**காந்தவியல்புகள்**

தாண்டல் மூலகங்களின் அநேக சேர்வைகள் பரகாந்த (காந்தப் புலத்தினுள் கவரப்படும்) இயல்பைக் கொண்டுள்ளது. இதனால் இச் சேர்வைகளில் சோடியற்ற இலத்திரன்கள் காணப்படலாம் என்பதாகும். மேலே தரப்பட்ட மங்கனீசு, இரும்பு அணுக்களின் அமைப்புக்களின் விளக்கப்படங்களில் சோடியற்ற இலத்திரன்கள் இருப்பதைக் காணலாம். மங்கனீசின் +7 ஒட்சியேற்ற நிலையில் பரகாந்தவியல்பு இருக்காது. இந்நிலையில் சோடியற்ற இலத்திரன்கள் காணப்படுவதில்லை.

**சிக்கல் அயன்கள் (Coordination Complexes)**

சிக்கல் அயன்கள் என்பவை பல அணு அயன்களாகும். இவற்றில் ஒரு நடு அணு அல்லது அயன், வேறு அணுக்களால் அல்லது அயன்களால் அல்லது அணுக்கூட்டங்களால் சூழ்ந்திருக்கப்படும் அமைப்பாகும். மைய அணுவுடன் இணைந்திருக்கும் கூட்டங்கள் இணையீடுகள அல்லது (இணையிகள்) (ligands) எனப்படும். இவ் இணையிகளின் எண்ணிக்கை, மைய அணுவின் ஈதல் வலு எண் (Coordination Number) எனப்படும்.

தாண்டல் மூலகங்களுக்கு சிக்கல் அயன்களை ஆக்கும் ஆற்றல் மிகுதியாகக் காணப்படுகின்றன. தாண்டல் மூலகங்களின் அயன்களில் வெற்று ஒழுங்குகள் காணப்படுவதே இதற்கான காரணமாகும். குரோமியம் அயன் $Cr^{3+}$ ஐ எடுத்துக்கொள்வோம். குரோமியத்தின் இலத்திரன் நிலையமைப்பு $Is^2, 2s^2, 2p^6, 3s^2, 3p^6, 3d^5$, 4s1 ஆகும். $Cr^{3}$ அயன் மூன்று இலத்திரன்களை இழப்பதால் பின்வரும் அமைப்பை இறுதி உபகத்தி மட்டங்களில் கொண்டிருக்கும்.

| 3d | | | | | 4s | 4p | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ↑ | ↑ | ↑ | | | | | | |

இங்கே ஆறு வெற்று ஒழுக்குகள் இருக்கின்றன. சிக்கல் அயன்கள் ஏற்படும்போது இவ்வெற்று ஒழுக்குகள் நிரப்பப்படுகின்றன. உதாரணமாக $Cr^{3+}$, $NH^3$ மூலக்கூறுகளுடன் சேரும்போது, நைதரசனில் இருக்கும் தனிச்சோடி இலத்திரன்கள் இவ்வெற்று ஒழுங்குகளை நிரப்பி சிக்கல் அயன்களைத் தருகின்றன.

$$Cr^{3+} + 6\,H{:}\ddot{\underset{\cdot\cdot}{N}}{:}H \rightleftharpoons [Cr(NH_3)_6]^{3+}$$

**சிக்கல் அயன்கள் உருவாகுவதற்கு உதவுகின்ற காரணிகளாவன**

1) மைய நேர் அயன்கள் (தாண்டல் மூலக அயன்கள்) சிறிதாக இருத்தல்
2) இவ்வயன்களில் காணப்படும் அயனேற்றமும், கருவில் காணப்படும் கருவேற்றமும் தாண்டல் மூலகங்களில் உயர்ந்து காணப்படுதல்.
3) மேலே விபரித்துள்ள வெற்றொழுக்குகள்.

**நிறங்கள்**

அநேகமான தாண்டல் உலோக அயன்கள் நிறமுள்ளவையாகும். கீழே உள்ள அட்டவணை நீர் ஏறிய அயன்களின் நிறங்களையும் அவற்றில் உள்ள 3d இலத்திரன்களின் எண்ணிக்கையையும் தருகின்றது.

| அயன் (ag) நீர் ஏறியது | நிறம் | 3d இலத்திரன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| $Sc^{3+}$ | நிறமற்றது | $3d^{0}$ |
| $Ti^{3+}$ | ஒருவகை ஊதா (Purple) | $3d^{1}$ |
| $V^{3+}$ | பச்சை | $3d^{2}$ |
| $Cr^{3+}$ | ஊதா (Violet) | $3d^{3}$ |
| $Cr^{2+}$ | நீலம் | $3d^{4}$ |
| $Mn^{3+}$ | ஊதா (Violet) | $3d^{4}$ |
| $Mn^{2+}$ | இளம் சிகப்பு | $3d^{5}$ |
| $Fe^{3+}$ | மஞ்சள் | $3d^{5}$ |
| $Fe^{2+}$ | பச்சை | $3d^{6}$ |
| $Co^{2+}$ | இளம் சிவப்பு<br>நீர் ஏருத $Co^{2+}$ நீலம் | $3d^{7}$ |
| $Ni^{2+}$ | பச்சை | $3d^{8}$ |
| $Cu^{2+}$ | நீலம் | $3d^{9}$ |
| $Zn^{2+}$ | நிறமற்றது | $3d^{10}$ |

இவற்றை அவதானிக்கும்போது $Sc^{3+}$,. $Zn^{2+}$ நீரேறிய அயன்கள் மட்டும் நியமற்றதாகக் காணப்படுகின்றன. இவற்றில் $Sc^{3+}$ இல் ஒரு d இலத்திரனும் இல்லாமல் இருப்பதாலும், நாகத்தில் d உபசத்தி மட்டம் நிரம்பியிருப்பதாலும் இவை தாண்டல் மூலகத்தின் அமைப்புப் பண்பை இழந்து விடுகின்றன. ஆகவே இவை நிறமற்றவையாகக் காணப்படுகின்றன.

ஒரு தாண்டல் உலோக அயனின் நிறம் அதனுடன் இணைந்திருக்கும் இணையீடுகளில் (Ligands) தங்கியுள்ளது. இவ்விணையீடுகள் தனிச்சோடி இலத்திரன்களை உடைய நீர் அமோனியா போன்ற நடுநிலை மூலக்கூறுகளாகவிருக்கலாம். அல்லது எதிர் அயன்களாகவிருக்கலாம்.

உதாரணம்: நீர் ஏறிய $Cu^{++}$ அயனின் நிறம் மென்னீலம் இதற்குள் போதியளவு அமோனியா சேர்க்கப்பட்டால் கடும் நீலநிறம் உண்டாகும்.

$$Cu\,(H_2O)_6]^{2+} + 4NH_3 \rightleftharpoons [Cu(NH_3)_4\,(H_2O)_2]^{2+} + 4H_2O$$

மென்நீலம் கடும்நீலம்

இதேபோல் செப்பு நீர் ஏறிய அயன்கள் உள்ள கரைசல்களுக்குள் போதியளவு குளோரைட்டு அயன்கள் சேர்க்கப்பட்டால் அது பச்சை நிறமாக மாறுகின்றது.

$$[Cu\,(H_2O)_6]^{2+} + 4Cl^- \rightleftharpoons [Cu\,Cl_4]^{2-} + 6H_2O$$

மென்நீலம் மஞ்சட் பச்சை

காரங்களில் எவ்வளவிற்கு நீரேறிய செப்பு அயன்களில் நீருக்குப் பதிலாக அமோனியா, குளோரைட்டு ஆகிய அயன்கள் இடம் பிடித்துக் கொள்ளுகின்றனவோ அவ்வளவிற்கு கலப்பு சிக்கல் அயன்கள் உருவாகும். இடைப்பட்ட நிறங்களும் உண்டாகும்.

இதேபோல் நீரேறிய கோபால்ற் (ஐஐ) அயன்கள் இளம் சிவப்பு நிறமானவை. ஆனால் கரைசலில் போதியளவு குளோரைட்டு அயன்கள் இருக்குமானால் நீல நிறமான சிக்கல் அயன்கள் உருவாகின்றன.

$$[Co\,(H_2O)_6]^{2+} + 4Cl^- \rightleftharpoons Co\,Cl_4]^{2-} + 6H_2O$$

இளம் சிவப்பு நீலம்

மேலும் ஒரே இணையீடுகளையும் (Ligands) ஒரே இணைப்பெண்ணையும் (Coordination Number) உடைய ஒரே மூலகத்தின் அயன், அது காணப்படும் ஒட்சியேற்ற நிலைக்கு ஏற்ப நிறத்தைக் காட்டும்.

உ-ம் $[Co\,(NH_3)_6]^{2+}$ ஒட்சியேற்றப்பட்டு $[Co\,(NH_3)_6]^{3+}$

இளம் சிவப்பு மஞ்சள்

ஒட்சியேற்ற எண் +2 ஒட்சியேற்ற எண் +3

**நிறங்களைத் தருவதற்கு ஒரு எளிய விளக்கம்:**

தாண்டல் உலோக அயன்கள் நிறம் உடையவையாய் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை விளக்குதல் கடினமாகும். ஆனால் நிறம் உண்டாதலில் பின்வரும். காரணிகள் சம்பந்தப்படுகின்றன.


1) 1 இற்கும் 9 இற்கும் இடைப்பட்ட d இலத்திரன்கள் உடையதாய் இருத்தல் வேண்டும்.
2) அயனைச் சூழ்ந்துள்ள இணையீடுகளின் தன்மை.

இவற்றின் சேர்வைகளில் இலத்திரன் உபசத்தி மட்டங்கள் சில மிக நெருக்கமாக (அதாவது சிறிய சத்தி வித்தியாசங்களில்) காணப்படும். இவற்றில் உள்ள இலத்திரன்கள், ஒளி அலைகளில் கட்புல எல்லைக்கு உட்பட்ட அலை நீளங்கள் உள்ள சத்தி அலைகளை உறிஞ்சி, மேல் சத்திமட்டங்களுக்குச் செல்லும். இதனால் அப்பொருட்கள் நிறத்தை உடையவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக நீர் ஏறிய செப்பு அயன்கள் நீலநிறமாய் இருப்பதற்கு, மேற்கூறிய முறையில் கீழ் சத்தி மட்டங்களில் உள்ள இலத்திரன்கள் மேல் மட்டத்திற்கு தாவும்போது செந்நிறஒளிச்சத்தி அலைகளை உறிஞ்சுகின்றன. வெள்ளொளியில் இருந்து செந்நிற ஒளி உறிஞ்சப்பட்டால் எஞ்சி இருப்பது நீலநிறமாகும்.


**பிறிதொரு திருப்திகரமான விளக்கம் பின்வருமாறு**

(பாடத் திட்டத்தில் அவசியமானது என்று கருதப்படவில்லை) d மட்டத்தில் உள்ள ஐந்து ஒழுக்குகளும் (Orbitals) தனித்தனியாக, வெவ்வேறு திசைகொண்டவையாகவும், சமமான சத்தி நிலையை உடையவையாகவும் இருக்கும். இவ்வொழுக்குகளை (Degenerate) **சிதைந்த ஒழுக்குகள** என்பர். இணையீடுகள் இணையும்போது, இதற்கு அண்மையில் இருக்கும் இலத்திரன்கள் தள்ளுப்பட இவற்றின் சில ஒழுங்குகள் உயர்ந்த சத்தி மட்டத்தை (ஏனைய d மட்ட ஒழுக்குகளைவிட அடைகின்றன. இவ்வாறு d மட்ட ஒழுக்குகள் இரண்டாக (சத்தி கூடிய, சக்தி குறைந்த என்று) பிரிகின்ற தன்மையை d சக்திமட்டம் பிளவுறுதல் என்று வர்ணிக்கப்படும்.

விளக்கப் படம் (I)




விளக்கப் படம் (II)




இத்தகைய d உபசத்தி மட்டங்களில் கீழ் d மட்டத்தில் உள்ள இலத்திரன்கள் ஒளிச்சத்தியை உறிஞ்சி மேல் மட்டத்திற்கு செல்வதால் நிறம் உண்டாகும்.

**ஊக்கித் தொழிற்பாடு:**

தாண்டல் மூலகங்களும், அவற்றின் சேர்வைகளும் பல இரசாயனத் தாக்கங்களில் ஊக்கிகளாகத் தொழிற்படுகின்றன. நாங்கள் ஏற்கனவே படித்த சில தாக்கங்களில் இதற்கான உதாரணங்களைக் காணலாம். எதிலீனை ஏதேன் ஆக ஐதரசன் ஏற்றும்போதும், கொழுப்புக்களையும் எண்ணெய்களையும் ஐதரசன் ஏற்றும்போதும் நிக்கல் ஊக்கியை உபயோகிப்பர்.

$$H_2 + H_2C = CH_2 \xrightarrow{Ni} CH_3 - CH_3$$

நைதரசனும் ஐதரசனும் சேர்ந்து அமோனியா தயாரிக்கும், தொழில் முறையில் (ஏபர் முறை) இரும்பு ஊக்கியாக உபயோகிக்கப்படும்.

$$N_2 + 3H_2 \xrightarrow{Fe} 2NH_3$$

தொடுகை முறையில் சல்பூரிக்கமிலம் தயாரிக்கும் போது வனேடியம் ஐ ஒட்சைட்டு ஊக்கியாக உபயோகிக்கப்பட்டது.

$$2SO_2 + O_2 \xrightarrow{V_2O_5} 2SO_3$$

ஊக்கித் தொழிற்பாட்டிற்கான காரணம் இவ்வூக்கிகளின் திண்ம உலோக மேற்பரப்பு தாக்கி மூலக்கூறுகளின் ஏவற்சக்தியை குறைக்க உதவுகிறது. இவ்வூக்கிகளின் மேற்பரப்பில் 4s இலத்திரன்கள் இருக்கும். அத்துடன் 3d இலத்திரன்களும் காணப்படும். இவை தாக்கி மூலக்கூறுகளுடன் பிணைப்புக்களை ஏற்படுத்துவதால் அம்மூலக்கூறுகளில் இருக்கும் பிணைப்புக்கள் வலுக்குறையும். ஆகவே குறைந்த ஏவற் சத்தியை பெற்று இவைதாக்கத்தில் ஈடுபடலாம். மேலும் ஒரு முறையில் இம் மேற்பரப்பு உதவுகின்றது. தாக்கி மூலக்கூறுகளின் செறிவு இம் மேற்பரப்புகளில் அதிகமாகும், தாக்கிகளின் செறிவு அதிகரித்தால் தாக்க வீதம் அதிகரிக்கும்.

தாண்டல் மூலக அயன்கள் தமது ஒட்சியேற்ற நிலைகளை மாற்றி தாக்கங்களில் பங்குபற்றுவதால் தாக்கங்கள் ஊக்கப்படுகின்றன. ஆனால் முடிவில் ஊக்கி அதன் பழைய ஒட்சியேற்ற நிலையில் இருக்கும்.

## தொகுப்பு மூலகங்கள் தொடர்பான சில பரிசோதனைகள்

ஆய்வு கூடத்தில் பின்வரும் பரிசோதனைகள் பயனுள்ளதாய் இருக்கும்.

பரிசோதனை I

பின்வரும் அயன்களை உடைய 0.1M கரைசல்களைத் தயாரிக்கவும்.

$$Cr^{3+},\ Fe^{2+},\ Co^{3+},\ Mn^{2+},\ Fe^{3+},\ Ni^{2+},\ Cu^{2+},\ Zn^{2+}$$

இவற்றினுள் (a) 2M, சோடியம் ஐதரொட்சைட்டுக் கரைசல்
(b) 2M, அமோனியாக் கரைசல்
(c) 2M, HCl கரைசல்
(d) 2M, KCNS கரைசல்

அகியவற்றை துளித் துளியாகச் சேர்த்து அவதானிக்கவும். சிறிது நேர அவகாசத்தின் பின் அவதானிக்கவும். மேலதிகமாக இக்கரைசல்களைச் சேர்க்கும் போதும், பின்பு கரைசல்களை ஐதாக்கும் போதும் நிகழும் சிற மாற்றங்களையும் அவதானிக்கவும்.

பரிசோதனை II

**நீர் ஏறிய செப்பு சல்பேற்று மூலக்கூறில் செம்பு அயனுடன் இணைந்துள்ள $NH_3$ மூலக்கூறு இணையிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.**

பின்வரும் பதார்த்தங்கள் எடுக்கப்படும்.
i. 15 ml 1M $CuSo_4$ நீர்க்கரைசல்
ii. 15 ml 1M $NH_3$ நீர்க்கரைசல்
iii. 30 ml குளோரோபோம் ($CHCl_3$)

இவற்றை ஒரு கூம்புக்குடுவையில் இட்டு தக்கையினால் மூடி நன்கு குலுக்கி மூன்று நாட்களுக்கு வைக்கப்படும். குளோரோபோம் படையில் 10ml ஐ கவனமாகப் பிரித்து எடுத்து அதற்கு நீர் சேர்க்கப்பட்டு 25ml ஆக்கப்படும் இக்கரைசல் 025m HCl கரைசலுக்கு (அளவியில்) எதிராக வலுக்கப்படும். மெனதல் செம்மஞ்சள் காட்டியாக உபயோகிக்கப்படும். வலுப்பார்த்தல் முடிவுகளையும், நீர் குளோரோபோம் ஆகியவற்றின் அமோனியாவின் பரவலுக்கான பங்கீட்டுக் குணகமும் தெரிந்தால் பின்வரும் முறையில் கணிப்புகளைச் செய்யலாம்.

$$\text{பங்கீட்டுக் குணகம்} = \frac{NH_3\ \text{நீர்}}{NH_3\ \text{குளோரோபோம்}} = 25$$

10 ml $CHCl_3$ படையில் உள்ள $NH_3$ ஐ நடுநிலையாக்கிய ·025 M HCl இன் கனவளவு = 4·5 ml

∴ குளோரோபோம் படையில் உள்ள

$$NH_3\ \text{இன் மூலர்த்திறன்} = \cdot025 \times \frac{4\cdot5}{10}$$

∴ நீர்ப்படையில் உள்ள

$$NH_3\ \text{இன் மூலர்த்திறன்} = \cdot025 \times \frac{4\cdot5}{10} \times 25^{*}$$

(* இங்கே 25 பங்கீட்டுக் குணகம் ஆகும்)

$$30\ ml\ CHCl_3\ \text{இல் உள்ள}\ NH_3 = \frac{\cdot025\times4\cdot5}{10} \times \frac{30}{1000}$$
$$= \cdot00034\ \text{மூல்}$$

$$30\ ml\ \text{நீர்ப்படையில் உள்ள}\ NH_3 = \frac{\cdot025\times4\cdot5}{10} \times 25 \times \frac{30}{1000}$$
$$= \cdot0084\ \text{மூல்}$$

∴ நீரிலும் $CHCl_3$ இலும் கரைந்துள்ள

$$NH_3 = \cdot00034 + \cdot0084 = \cdot00874$$

நாம் எடுத்த 15 ml 1M $NH_3$ கரைசலில் இருந்த

$$NH_3 = \frac{1\times15}{1000} = \cdot015\ \text{மூல்}$$

∴ $CuSO_4$ இல் இணைந்த அமோனியா = ·015 − ·00874
= ·00626 மூல்

நாம் எடுத்த ·1M $CuSO_4$ கரைசலில் உள்ள

$$Cu^{++} = \frac{\cdot1\times15}{1000} = \cdot0015\ \text{மூல்}$$

∴ $Cu^{++}$ அயன்களுக்கும் $NH_3$ க்கும் உள்ள விகிதம்
= ·0015 : ·00626 = 1 : 4

∴ குப்பிரா அமோனியம் அயன் = $^{*}[Cu(NH_3)_4]^{2+}$

குறிப்பு: நீர்ப்படையில் இருக்கும் அமோனியாவை அறிய நேரடியான நியமித்தல் செய்ய முடியாது. அதில் செப்பு சல்பேற்றும் கரைந்து காணப்படுவதால் கரைசல் நீல நிறமாகக் காணப்படும். காட்டி காட்டும் நிறமாற்றங்களை அவதானிக்க முடியாது.

### பரிசோதனை iii

$$Cr^{3+},\ Fe^{2+},\ Co^{3+},\ Mn^{2+},\ Fe^{3+},\ Ni^{2+}\ Cu^{2+},\ Zn^{2+}$$

**ஆகிய அயன்கள் உடைய கரைசல்களுடன் ஐதரசன் சல்பைட்டின் தாக்கம்.**

மேலே தரப்பட்ட அயன்கள் உடைய கரைசல்களுக்குள் ஐதரசன் சல்பைட்டு வாயு செலுத்தப்பட்டது.

I $Cu^{++}$ அயன்கள் உள்ள கரைசல் கரியநிறமான CuS வீழ்ப்படிவாக கிடைக்கின்றது.


II $Zn^{++}$ அயன்கள் உள்ள கரைசல் ஓரளவு வெள்ளைநிற வீழ்ப்படிவைத் தந்தது. ஏனைய சந்தர்ப்பங்களில் கரைசல்கள் கலங்கலாகக் கூடும். ஆனால் தெளிவான வீழ்ப்படிவைத் தரவில்லை. காரணம் இவ் வயன்கள் ஈடுபடும் தாக்கங்கள் மீள்தாக்கங்களாகவிருப்பதனால் முற்றுப் பெறுவதில்லை.


உ-ம்: $ZnSO_4 + H_2S = ZnS - H_2SO_4$


கார ஊடகத்தில் $H_2S$ஐ செலுத்தி ஏனைய அயன்களின் சல்பைட்டுக்களை வீழ்ப்படிவாகப் பெற்றுக்கொள்ளலாம். (பக்கம் 75, 76ஐ பார்க்கவும்) இவ் வீழ்ப்படிவுகளின் நிறங்கள் பின்வருமாறு MnS மென்கபிலம் அல்லது இளம்சிவப்பு , ZnS வெள்ளை, CoS கறுப்பு, NiS கறுப்பு, FeS கறுப்பு, CrS கறுப்பு.


III $Fe^{3+}$ அயன் உள்ள கரைசல் அதன் கபில மஞ்சட் கரைசலில் இருந்து மென்பச்சை நிறமாக மாறுவதற்கான காரணம். பெரிக்கு அயன்கள் பெரசு அயன்களாகத் தாழ்த்தப்படுவதாகும்.


$$Fe^{3+} + S^{-} = Fe^{2+} + S$$
கபிலம் மென் பச்சை



சாய் சதுரம் கந்தகம்


ஒரு சரிவுக் கந்தகம்


நீரின் கட்டமைப்பு


$H_2S$ இன் கட்டமைப்பு


SO 2/4 இன் கட்டமைப்பு


SO 2/4 இன் மூலகக்கூற்றுருவம்

(தொடரும்...)

# ஆளுநர் மாளிகைமுற்றுகையிட முயற்சி
# 300இற்கும் அதிகமானவர்கள் கைது



ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக இந்தியா தீர்மானம் கொண்டு வர வலியுறுத்தி, தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் ஒரு வாரத்தைக் கடந்துள்ளது. கல்லூரிகளுக்கு தமிழக அரசு கால வரையற்ற விடுமுறை அறிவித்த பின்னர் மாணவர்கள் போராட்டம் மேலும் வலுவடைந்துள்ளது.


இந்நிலையில், இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், சென்னையில் 25இற்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் நேற்றையதினம் ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்திப் பொலிஸார் கைதுசெய்தனர். 300 இற்கும் அதிகமான மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 10இற்கும் மேற்பட்ட பேருந்துகளில் அவர்களை ஏற்றிச் சென்றனர் பொலிஸார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், டில்லி பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டக்களத்தில் குதித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நிறைவேற்றும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் எனக் கோரி பேரணியும் நடத்தினர். இதில் வட மாநில மாணவர்களும் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டனர்.

**இந்தியச் செய்திகள்**

# இந்திய கடற்பகுதியில் 5இலங்கை மீனவர்கள் கைது



(தூத்துக்குடி)

தூத்துக்குடி அருகே இந்திய கடற்பகுதியில் மீன்பிடித்ததாகக் கூறி, இலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்களை இந்திய கடலோர காவல் படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

தூத்துக்குடியில் இருந்து 48 கடல் மைல் தொலைவில் இந்திய கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து இலங்கை மீனவர்கள் சிலர் ஒரு படகில் ஞாயிற்றுக்கிழமை மீன்பிடித்துக் கொண்டிருந்ததை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய கடலோர காவல் படையினர் கண்டனர்.

இதையடுத்து, இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான நாகி தேவி கப்பல் அந்தப் படகை ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணியளவில் சுற்றி வளைத்தது. பின்னர், படகை பறிமுதல் செய்த கடலோர காவல் படையினர் அதில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்களையும் கைது செய்து தூத்துக்குடிக்கு அழைந்து வந்துள்ளனர்.

# இத்தாலி மீதான நம்பிக்கையை இழந்துவிட்ட உச்சநீதிமன்றம்



இத்தாலி மீதான நம்பிக்கையை இழந்து விட்டோம் என்று உச்ச நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது. கேரள மீனவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், இத்தாலி கடற்படை வீரர்களை திருப்பி அனுப்பமாட்டோம் என்று இத்தாலி அரசு கூறிவிட்ட நிலையில், உச்ச நீதிமன்றத்தில் நேற்று வழக்கு விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் போது, இத்தாலி நாட்டு தூதர் ஆஜரானார். அவரிடம், இனிமேல் உங்களை நம்புவதாக இல்லை.

இத்தாலி மீதான நம்பிக்கையை இழந்து விட்டோம். இத்தாலி தூதர் இவ்வாறு நடந்து கொள்வார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று உச்ச நீதிமன்ற நீதிபதி கூறினார். மேலும், அடுத்த விசாரணை நடைபெறும் ஏப்ரல் 2ஆம் திகதி வரை இந்தியாவை விட்டு இத்தாலி தூதர் வெளியேறக் கூடாது என்றும் உத்தரவிட்டார்.

மார்ச் 22ஆம் திகதிக்குள், உச்ச நீதிமன்றத்தில் இத்தாலி கடற்படை வீரர்கள் இருவரையும் இத்தாலி தூதர் ஆஜர்படுத்தவில்லை என்றால், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படும் என்றும் கண்டிப்புடன் கூறியுள்ளார் நீதிபதி

# தி.மு.கவின் விலகல் எச்சரிக்கை
# சோனியா இன்று ஆலோசனை

(டில்லி)

மத்திய அரசில் இருந்து விலகுவோம் என தி.மு.க எச்சரித்துள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து காங்கிரஸ் எம்.பிக்களுடன் அக் கட்சியின் தலைவர் சோனியா காந்தி இன்று ஆலோசனை நடத்தவுள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து அதை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி வற்புறுத்தி உள்ளார். அதாவது இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை போர்க்குற்றம் என்றும், இனப்படுகொலை என்றும் பிரகடனப்படுத்துமாறும், போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க சுயேச்சையான பன்னாட்டு விசாரணை ஆணையம் அமைக்கும் வகையிலும் திருத்தம் செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மத்திய அரசை வற்புறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் அவர் விடுத்த கோரிக்கைகளை அவர்கள் காற்றில் பறக்கவிட்டனர். இதையடுத்து அமெரிக்க தீர்மானத்தில் இந்தியா மேற்கண்ட திருத்தங்களைக் கொண்டு வராவிட்டால், காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க நீடிக்காது என்றும் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனால், சோனியா, ராகுல்காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைமை நெருக்கடியில் உள்ளது. இலங்கை விவகாரத்தை வைத்து கூட்டணியில் இருந்து தி.மு.க வெளியேறினால், காங்கிரஸ் தமிழர்களுக்கு விரோதமானது என்ற முத்திரை விழ வாய்ப்புள்ளது.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி இன்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற பொதுக் குழுவை (எம்.பிக்கள் கூட்டம்) கூட்டியுள்ளார். அதில் கருணாநிதி விடுத்துள்ள எச்சரிக்கையை தொடர்ந்து, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எம்.பிக்களின் கருத்துகளை அவர் கேட்டறிய உள்ளார். மேலும் ஹெலிகொப்டர் ஊழல் விவகாரம், இத்தாலிய கடற்படை வீரர்கள் விவகாரம் குறித்தும் சோனியா ஆலோசனை நடத்தவுள்ளார்.

## கதி ஈயும் நாமம்

(உரோமர் 4 : 13, 16 - 18, 22)
(மத்தேயு 1 : 16, 18 - 21, 24)

யோசேப்பு நேர்மையாளர் என்று பொதுவிவிலியம் கூறுகிறது. அவர்கள் "கூடி வாழுமுன் மரியாள் கருவுற்றிருந்தது தெரிய வந்தது." என்ற வார்த்தைகள் ஒரு பூகம்பம் வெடித்தது போன்ற வார்த்தைகள் எவருக்குமே வந்திருக்கக்கூடாத இக்கட்டான நெருக்கடியான, அவமானமான, சமுதாயத்திற்கு முகம் கொடுக்க முடியாத ஒரு நிலை.

இப்படிப்பட்ட நெருக்கடி நிலையில் எவருமே தன்னிலை இழந்து விடக்கூடும். சுயநலமாய் நடந்துகொள்ளக்கூடும், அடுத்தவரை அவமானத்திற்கும் பழிச்சொல்லுக்கும் உட்படுத்தித் தமது பெயரை, தமது நேர்மையை காப்பாற்றிக்கொள்ள நினைக்கக் கூடும். இப்படிப்பட்ட ஓர் நெருக்கடி வந்திருந்தால் நாம் எப்படி நடந்து கொண்டிருப்போம்?

யோசேப்பு மரியாளை இகழ்ச்சிக்கு உள்ளாக்கவில்லை, அம்பலப்படுத்தாமல், அவமானப்படுத்தாமல் மறைவாக (இரகசியமாக) மரியாளை விவாகரத்துச் செய்வதற்கு விலக்கிவிடத் திட்டமிட்டார். யோசேப்புவின் இந்த நடவடிக்கை அவர் பண்பாளர், நேர்மையாளர், துணிவாளர் என்பதைக் காட்டுகின்றதன்றோ?

யோசேப்பு நேர்மையாளர் என்பதற்கு இந்த வார்த்தைகளை விட வேறு சாட்சியம் வேண்டுமா? "யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணிந்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியாள் தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடிவாழவில்லை. யோசேப்பின் கண்ணியத்தையும், விசுவாசத்தையும், விசுவாசக் கீழ்ப்படிவையும் இந்த வார்த்தைகள் உணர்த்தவில்லையா?

வி.பி.தனேந்திரா.

**உணர்ச்சி வசப்பட்ட...**

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இவ்வாறான வளங்களையும் வாய்ப்புகளையும் கொண்ட த.தே.கூ.தலைவர்கள் வெளிநாடுகள் செய்யும் உதவிகள் எவ்வளவு கிடைத்திருக்கின்றன, எவ்வெவற்றுக்காகக் கிடைத்திருக்கின்றன என்கின்ற விபரங்கள் அத்தனையையும் அந்த நாடுகளின் தூதரகங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் வடக்கு - கிழக்கு மக்களின் நல்வாழ்வு முன்னேற்றங்களுக்கும், வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் பொருளாதார மற்றும் கட்டுமான அபிவிருத்திகளுக்கும் என்னென்ன உதவிகள் எவ்வெவ்வளவு உதவிகள் வேண்டுமென்பதை வெளிநாடுகளிடம் கேட்டு அவற்றை உரிய மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் சென்றடையும் நிலையை ஆக்கக்கூடிய சந்தர்ப்பங்களை த.தேகூவினர் நிறையவே கொண்டுள்ளனர்.

த.தே.கூவினர் அவ்வாறு கொஞ்சமாவது செய்கிறார்களா? அல்லது இனியாவது அவ்வாறு ஏதாவது செய்வார்களா? அல்லது' அவற்றைச் செய்வது தமது கடமையே என்ற அக்கறையாவது அவர்களுக்கு உண்டா என்ற கேள்விகள் இங்கு எழுவது நியாயமே.

மகிந்த அரசு ஏதாவது வெளிநாட்டு நிதி உதவியை திசை திருப்பியிருந்தால் அதனை பொததாம் பொதுவான குற்றச் சாட்டாக மேடைப் பேச்சுப் பாணியில் முன்வைக்காமல் குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் ஆதார பூர்வமாகவும் அதே நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கு த.தே.கூவினருக்கு எல்லா வாய்ப்புக்களும் இன்று உள்ளன.

த.தே.கூவுக்கு அதன் பலம் தெரியாமல் இருக்கிறதா? அல்லது இதெல்லாம் அவர்கள் நடத்தி வரும் தேர்தல் அரசியலின் உள்நோக்கங்களுக்கு அவசியமற்றவை என அவர்கள் கருதுகின்றார்களா? என்ற கேள்விகளும் இங்கு நியாயமாகவே எழுகின்றன.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரியபோரை முடிவிற்குக்கொண்டுவர பிரிக்ஸ் நாடுகளிடம் கோரிக்கை

சிரியாவில் நடந்து வரும் உள் நாட்டுப் போரில் ஆதரவு தரக் கோரி பிரிக்ஸ் நாடுகளிடம் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் உதவி கேட்டுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ள பிரிக்ஸ் மாநாட்டில் அவ் வமைப்பில் அங்கம் வகிக்கும் பிரேசில், ரஷ்யா,இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா ஆகிய நாடுகள் கலந்துகொள்கின்றன.


இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கு சிரிய ஜனாதிபதி ஆசாத்தின் ஆலோசகர் பொதைனா ஷாபான் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது அவர தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சுமாவிடம் கடிதம் ஒன்றை வழங்கினார்.

அக்கடிதம் குறித்து பொதைனா ஷாபான் கூறியதாவது: இன்று நான், சிரிய ஜனாதிபதி ஆசாத் சார்பாக சிரியாவில் நிலவும் சூழ்நிலை குறித்த ஒரு கடிதத்தை தென் ஆபிரிக்க ஜனாதிபதியிடம் வழங்கியுள்ளேன். இந்த கடிதத்தில், ஆசாத் சிரியாவில் நடைபெற்று வரும் வன்முறைகளை நிறுத்த பிரிக்ஸ் நாடுகளின் உதவியை கோரியுள்ளார்.



சிரிய அரசு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணத் தயாராக இருக்கிறது. பிரிக்ஸ் நாடுகள் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உதவ வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# ஆற்றுக்குள் விழுந்தது பேருந்து ஈக்குவடோரில் 16 பேர் பலி



ஈக்குவடோர் நாட்டின் டுன்கரா'ஹ மாகாணத்தில் இருந்து ஜீன்ஸ் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் 36 பேர் குயகுயில் நகரத்தில் நடைபெறும் கண்காட்சிக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் குயாஸ் மாகாணத்தில், இ.ஐ நெடுஞ்சாலை பாலத்தின் மீது இந்த பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் விழுந்து விபதுக்குள்ளானது. இதில் 16 பயணிகள் உயிரிழந்தனர். மேலும் 25 பயணிகள் காயமடைந்தனர்.

மோசமான வானிலையே இந்த விபத்துக்குக் காரணம் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் கூறினர் இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரட்டையர்கள் ஓய்வு



50 வருடமாக, அதாவது தங்களது 20 வயது முதல் விபசாரத்தில் ஈடுபட்டு வந்த இரட்டைச் சகோதரிகள், தங்களது 70ஆவது வயதில் விபசாரத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இவர்கள் நெதர்லாந்து நாட்டின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமைச் சேர்ந்தவர்கள். இருவரும் இதுவரை 3 இலட்சத்து 55 ஆயிரம் ஆண்களுடன் உறவு கொண்டுள்ளனர்.

இவர்களின் பெயர் லூயிஸ் போக்கன் மற்றும் மார்ட்டின் போக்கன். இருவரும் ஆம்ஸ்டர்டாமின் சிவப்பு விளக்குப் பகுதியில் மிகவும் பிரபலமானவர்கள். விஐபி விபசாரப் பெண்களாக வலம் வந்தவர்கள். இப்போது உடல்நிலை மற்றும் வாடிக்கையாளர் குறைவு காரணமாக ஓய்வு பெற்றுள்ளனர்.

உலகச் செய்திகள்

# முழுமையான பதவிக்காலத்தை நிறைவுசெய்தது நாடாளுமன்றம்

## பாகிஸ்தான் வரலாற்றில் சாதனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக நாடாளுமன்றம் முழு பதவிக்காலத்தையும் முடித்துள்ளது. பாகிஸ்தான் உதயமாகி 66 ஆண்டுகளில் ஒரு முறை கூட தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் தனது பதவிக் காலத்தை முழுமையாக முடித்ததில்லை. இடைக்காலத்திலேயே இராணுவப் புரட்சி, ஆட்சிக் கவிழ்ப்பு என்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடும். இது வரை 12 நாடாளுமன்ற சபைகள் அற்ப ஆயுளில் முடிந்து விட்ட நிலையில், முதல் முறையாக 13ஆவது நாடாளுமன்ற சபை கடந்த சனிக்கிழமை முழு பதவிக் காலத்தை முடித்தது.

இதன்பின், சபை கலைக்கப் படுவதற்கு முன்பாக, வானொலியில் நாட்டு மக்களுக்கு பிரதமர் அஷ்ரப் உரையாற்றினார். அப்போது பாகிஸ்தானில் ஜனநாயகம் வேரூன்றியதற்கு காரணமானவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார். பாகிஸ்தான் அரசியல் சட்டப்படி, ஒரு அரசு பதவிக் காலம் முடிந்ததும் ஆளும்கட்சியும், முக்கிய எதிர்க் கட்சியும் இணைந்து இடைக் கால பிரதமரை தேர்ந்தெடுக்க வேண்டும். அவரது கண்காணிப்பில் தேர்தல் நடைபெற வேண்டும்.

இதேவேளை, பாகிஸ்தானில் இருந்து வெளியேறி, லண்டனிலும் துபாயிலுமாக வசித்து வரும



முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் எதிர்வரும் 24ஆம் திகதி நாடு திரும்புவதாக கூறியுள்ளார். அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், 24ஆம் திகதி கராச்சிக்கு வருவதாகவும், வரும் தேர்தலில் தனது கட்சியை வழிநடத்திச் செல்லப் போவதாகவும் கூறியுள்ளார். பெனாசிர் கொலை வழக்கில் அவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருக்கிறார். அதனால், நாடு திரும்பினால் கைது செய்யப்படுவோம் என்ற அச்சத்தில் இதுவரை அவர் பாகிஸ்தானுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்சிஸ் பெயர் தெரிவு ஏன்? விளக்கமளிக்கும் பாப்பரசர்



ஏழைகளை நேசித்த மத குரு பிரான்சிஸ் நினைவாகவே அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்ததாக புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள பாப்பரசர் தெரிவித்துள்ளார்.கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் 266ஆவது பாப்பரசராக ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இனி பாப்பரசர் பிரான்சிஸ் என அழைக்கப்படுவார். அது குறித்து அவர் கூறியதாவது:

12-13ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் அஸிஸி பகுதியில் வாழ்ந்த மதகுரு பிரான்ஸிஸ், ஏழைகளிடம் மிகுந்த அன்பு காட்டினார். அமைதியின் பிரதிநிதியாக விளங்கினார். சக மத குருவான பிரேஸிலைச் சேர்ந்த என் நண்பர், நான் பாப்பரசராக தேரவானதும், "ஏழைகளை மறந்துவிடாதே" என்று கூறினார். அப்போது, உடனடியாக புனித பிரான்சிஸ் நினைவு எனக்கு வந்தது. ஆகவே, அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தேன் எனத் தெரிவித்துள்ளார். புனித பிரான்சிஸ், விலங்குகளையும் சகோதரர்களாகவே பாவித்தார் எனக் கூறப்படுகிறது.

பாப்பரசர் தனது பதவியேற்பு உரையின்போது குறிப்பிட வேண்டியவற்றைத் தயாரிக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தேவாலயங்கள் ஏழை களின் பக்கம் இருப்பதை அவர் வலியுறுத்துவார் எனத் தெரிகிறது. இன்று நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவில் 10 இலட்சம் மக்கள் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்ஜனரீன அதிபர் கிறிஸ்டினா கிர்ச்னெர், அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடன் உட்பட ஏராளமான தலைவர்களும் பதவியேற்பு நிகழ்சசியில் பங்கேற்கவுள்ளனர்.

# ஹெலியில் தப்பிய கைதிகள் கனடாவில் பெரும் அதிர்ச்சி

கனடாவில் உள்ள சிறை ஒன்றிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் தப்பிச் சென்ற இரு கைதிகளை அந்நாட்டு பொலிஸார் தேடி வருகின்றனர்.

கியூபெக் நகரத்தில் உள்ள செயின்ட் ஜெரோம் சிறையிலிருந்த கைதிகள் இருவர், சிறைக் கண்காணிப்பாளரை நாடகமாடி ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக சிறை அதிகாரிகள், பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இது குறித்து நடத்தப்பட்ட விசாரணையில் கைதிகள் இருவரும், சிறை வளாகத்தில் வந்திறங்கிய ஹெலிகொப்டர் மூலம் தப்பிச்சென்றது தெரியவந்தது.

அந்தக் ஹெலிகொப்டரை மடக்கிப் பிடித்த பொலிஸார், அதன் விமானியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். ஹெலிகொப்டர் மூலம் கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் கனடாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

# பண்டைய பறவைகளுக்கு நான்கு இறக்கைகள்

## சீன ஆய்வாளர்கள் தகவல்



பத்துகோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பறவைகளின் உடலில் நான்கு இறக்கைகள் இருந்ததாக சீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பல கோடி ஆண்டுகளுக்கு முன், பூமியில் வாழ்ந்த பிரமாண்டமான விலங்குகளான டைனோசர்களின் வழித் தோன்றல்கள்தான், தற்போது இருககும் பறவைகள் என, ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்நிலையில், பண்டைய காலப் பறவைகளின் உடல் படிமங்களை ஆய்வு செய்த, சீனாவின் லின்யி பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், அப்பறவைகளின் கால்களிலும், இறக்கை இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.இதுகுறித்து, அவர்கள் கூறியதாவது:

சீனாவின் ஷண்டாங் மாகாணத்தில் உள்ள, டியான்யூ மியூசியத்தில் உள்ள, வான்கோழியை விட அளவில் சிறிய, 11 வெவ்வேறு வகை பறவைகளின் உடல் படிமங்களில், ஆய்வு நடத்தினோம். இப்பறவைகள், 10 முதல், 15 கோடி ஆண்டுகளுக்கு முன், வாழ்ந்தவை.இப்பறவைகளுக்கு, வழக்கமான இறக்கைகளுடன், கால்களிலும் இறக்கை இருந்தது, ஆய்வில் தெரியவந்துள்ளது. பரிணாம வளர்ச்சியில், தரையில் நடக்க வசதியாக, அவற்றின் கால்களில் இருந்த இறக்கைகள் உதிர்ந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இவ்வாறு, ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

# நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இன்னும் கவனிக்கப்படாத நிலையில்

## நிலைமையை விளக்குகிறார் சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா)

கடந்தகால யுத்தத்தால் வட மாகாணத்தில் இன்னமும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்காதுள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

வன்னி மாவட்டத்தில் வலிந்து குடியேற்றப்பட்டுள்ள சிங்களப் பகுதிகளில் உள்ள சிங்களப் பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளின் நிர்மாண, புனரமைப்பிற்கு 400 மில்லியன் ரூபாய்கள் மாகாணக் கலவி அமைச்சு வழங்கியுள்ளது.

தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள் கற்பதோடு, காலை உணவிற்கே வழியில்லாமல் கற்க வருகின்ற பிள்ளைகள் உள்ள முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலையின் தேவை சொற்பளவில் உள்ளது. ஆனால் இதற்கான அபிவிருத்திகள் இடம்பெறவில்லை.

வேறு இடங்களில் உள்ள வசதியான பாடசாலைகளின் அபிவிருத்திகள் அதிகரிக்கப்படுகின்றன. எனினும் முல்லைத்தீவில் இறுதிக்கட்டப் போரால் மோசமாக பாதிப்படைந்த தமிழ் பாடசாலைகளின் புனரமைப்பு பாராமுகமாகவே கிடப்பில் விடப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகதாரலிங்கம். சேருவாவில பிரதேசசபை உறுப்பினர் சிவலோகேஸ்வரன், கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ருவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (160)

# இளைஞர்கள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை இரவு குருநகர் தொடர்மாடியில் உள்ள வீடு ஒன்றில் தாலியைத் திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 2 இளைஞர்களை யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இவ்விரு இளைஞர்களும் யாழ். பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு குருநகர் தொடர்மாடிப் பகுதியில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றதாகவும் இதனை சாதகமாகப் பயன்படுத்தியே இந்தத் திருட்டு நடைபெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சந்தேகநபர் ஒருவர் குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்தே மற்றைய இளைஞருமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாவாந்துறைப பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு திருட்டுச் சம்பவத்தில் சந்தேகநபர் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# வடக்கில் சனத்தொகைப் பரம்பலை மாற்றியமைக்கத் துடிக்கிறது அரசு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. சர்வதேச சமூகத்தினால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அரசாங்கம் யதார்த்தமான முறையில் பதிலளிக்கத் தவறியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் கால அவகாசம் கோரி வருகின்ற போதிலும் அதன் பின்னணியில் அரசாங்கத்தின் சுயலாப நோக்கங்கள் மறைந்திருப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். வடக்கு, கிழக்கின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி அடையக் கூடிய வகையில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த நிறைவின் மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தக் கிட்டிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் மெய்யான அர்ப்பணிப்புடன் செயற்படத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# சிவில் மற்றும் விமான தினம் ஜனாதிபதியால் பிரகடனம்

சிவில் மற்றும் விமான தினமாக நேற்று மார்ச் 18 ஆம் திகதியை அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. இந்த அறிவிப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மத்தள ராஜபக்ஷ விமான நிலைய திறப்பு விழாவில் வெளியிட்டார்.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் மார்ச் 18 ஆம் திகதியும் சிவில் மற்றும் விமான தினம் நாட்டில் அனுஷ்டிக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ விமான நிலையும் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இதன் ஞாபகார்த்தமாகவே இந்தத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியப்...

விழுந்துள்ளார். இந்நிலையில் பின்னால் வந்த டிரக்டர் அவர் மீது மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தாண்டியடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் டிரக்டர் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பிலான விசாரணையை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மௌனத்தைக்...

மேலும் வலுப்படுத்த தேவையான மாற்றங்களையும் சுதந்திரமான முறையில் முன்னெடுக்க வேண்டும்.

கடந்தாண்டு ஜெனிவாவில் அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய பிறகும், இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்தத் தருணத்தில், இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் படுகொலைகள் தொடர்பாக இந்தியா எந்த ஒரு நிலைப்பாட்டையும் எடுக்காதது வருத்தமளிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிப்பது தொடர்பாகவும், மத்திய அரசு மௌனியாக இருப்பது அதிருப்தியளிப்பதாக குறிப்பிட்டுள்ள ஜெயலலிதா, அமெரிக்காவின் தீர்மானத்தை தைரியமாக ஆதரிக்க வேண்டும் என தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### இலங்கை...

ராகுல் காந்தி நியமிக்கப்பட்ட பின்னர் நடக்கும் கட்சியின் முதல் எம்.பி.க்கள் கூட்டம் இதுவாகும்.

அதேவேளை, அமெரிக்கத் தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தியாவின் ஜெனிவாப் பிரதிநிதியை இந்திய அரசாங்கம் புதுடில்லிக்கு அழைத்துள்ளது. அமெரிக்கா, ஜெனிவாவில் முன்வைத்துள்ள யோசனையின் இறுதி வரைபு தொடர்பில் முக்கிய கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான வரைபு தொடர்பில் அரசாங்கத்தின் உயரதிகாரிகளுக்கும் விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக இந்தியாவின் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னரே இலங்கைக்கெதிரான அமெரிக்க யோசனை தொடர்பில் இந்திய முடிவு அறிவிக்கப்படும் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### நாட்டை அடகு...

தரையிறங்கியது. அதற்கு பின்னர் இரத்மலானையில் தரையிறங்கியது.

இரண்டாவது உலக யுத்தகாலத்தில் அதாவது, 1940 களில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உருவாக்கப்பட்டது.உலக யுத்தகாலத்தில் கொழும்பிலும் திருகோணமலையிலும் குண்டுகள் வீசப்பட்டன. விடுதலைப்புலிகளும் குண்டுகளை வீசித் தாக்குதலை நடத்தினர். இலங்கைக்கு பருப்பும் போடப்பட்டது.

1986 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது புலிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதேபோல 1987 ஆம் ஆண்டு வானிலிருந்து இலங்கைக்கு பருப்பும் போடப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையினால் கோடிக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

இரணைமடுவிலிருந்து புலிகளின் விமானம் கொழும்புக்கு வந்து குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. அன்றைய காலத்தில் புதிய விமான நிலையங்கள் உருவாக்குவது அல்ல. இருக்கும் விமானங்களை பாதுகாப்பதே பெரும் பிரச்சினையாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நாட்டில் குறிப்பிட்ட சில காலத்திற்குள் சமாதானத்தை ஏற்படுத்தினேன்.

பஞ்ச சக்திகளில் விமான பலத்தையும் கட்டியெழுப்பி நாட்டை ஆசியாவிலேயே ஆச்சரியமிக்கதாக மாற்றுவேன். நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டே மத்தள விமான நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

மத்தளவில் விமானங்கள் தரையிறங்கும் போது நாட்டின் அபிவிருத்தி மேலோங்கும். மத்தளவில் விமானம் தரையிறங்கும் போது அது ஊவா, சப்ரகமுவை மட்டுமன்றி முழு நாட்டின் பெறுமதியையும் உயர்த்தும்.

நாட்டை எங்களுடைய வருமானத்தில் அபிவிருத்தி செய்யமுடியாது. சர்வதேச கடன்களை பெற்றுக்கொள்ளவேண்டும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா கட்டிக்கொடுத்தது போல இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தையும் கட்டிக்கொடுத்துள்ளது.

சர்வதேச கடன்களை பெற்றே நாட்டை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கின்றோம். சாப்பிடுவதற்காக நாங்கள் கடன் பெறவில்லை, நாட்டை அபிவிருத்தி செய்யவே கடன்களைப் பெற்றுள்ளோம். கடன்களை பெற்றமையினால் பின்னடையவில்லை பின்னடையவும் மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# பௌத்த பிக்கு மீது தாக்குதல் புதுடில்லியில் உயர்மட்ட பேச்சு

(கொழும்பு)

இந்தியாவுக்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வகையிலான உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் இலங்கை மற்றும் இந்திய அதிகாரிகளுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நாளாகவும் தமிழ்நாட்டில் வைத்து இலங்கை பௌத்த பிக்குமார்கள் இருவர் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந்த அவசர பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளது. இந்தியாவுக்குச் செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்புக்கு இந்திய அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று இலங்கை உயர்ஸ்தானிகர்களால் மேற்படி பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பௌத்த தேரர் ஒருவர் உட்பட இலங்கை பிரயாணிகள் சிலர், சென்னை புகையிரத நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை டில்லியில் இருந்து தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் மூலம் சென்னைக்கு வந்த இலங்கையை சேர்ந்த 18 பேர் கொண்ட குழுவில் இருந்த பௌத்த துறவி மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்த சனிக்கிழமையன்றும் தஞ்சாவூர் பிரதேசத்தில் வைத்து இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேரர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அடிக்கடி...

வாகனத்தில் பயணித்த மூவரும் சிறு காயங்களுக்குள்ளாகியதாகவும் தெரியவருகின்றது. கடுமையாக சேதமடைந்த கன்ரர் வாகனம் காலைவரை பாலத்திலேயே காணப்பட்டது. இந்த விபத்தில் கன்ரர் வாகனத்தை மோதிய டிப்பர் வாகனம் சாவகச்சேரி பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.


கைதடிப் பாலத்தில் கரைப்பக்கமாக மிதிக்கு போடப்பட்டிருந்த தகரம் ஒன்று பழுதடைந்திருந்ததன் காரணமாக அந்தப் பகுதியின் முன்பாக பரல் ஒன்று வைக்கப்பட்டு போக்குவரத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2 வாகனங்களும் நேருக்குநேராக வந்த போது பாலத்தில் வழுக்கும் தன்மை காணப்பட்டதால் வேகக்கட்டுப்பாட்டையும் மீறி இவ்விபத்து நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நாவற்குழிப் பாலத்திலும் நடைபெற்ற விபத்து ஒன்றில் அதிகாலையில் பிக்கப் வாகனத்தில் பயணித்த இருவர் படுகாயங்களுக்குள்ளாகியமை தெரிந்ததே.

அண்மைக்காலமாக யாழ். நகரை அண்மித்த பிரதான வீதிகளின் பாலங்களில் அடிக்கடி விபத்துக்கள் சம்பவிப்பது சர்வசாதாரணமாகிவிட்ட நிலையில் இவ்வாறான விபத்துக்களைத் தடுப்பது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. (பா,43)

# விழிப்புடன் இருங்கள்
# யாழில் மோசடிகள் அதிகம்



இந்தப் படத்தில் காணப்படும் பிரஸ்தாப நபர் வெளிநாட்டில் உயர் சம்பளத்துடன் வேலை வாய்ப்பினைப் பெற்றுத்தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

தற்போது நீர்கொழும்பில் வசிக்கும் சிவநாதன் அன்ரன் சியாம் குமார் எனும் குறித்த நபரே இவ்வாறு ஆறு இளைஞர்களிடமும் பெருந்தொகையான பணத்தை மோசடி செய்து தற்போது தலைமறைவாகியுள்ளார்.

எனவே இந்நபர் தொடர்பான தகவல்களை அறிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக தெரியப்படுத்தும் அதேவேளை, எதிர்காலங்களில் இவ்வாறான ஏமாற்றுக்காரர்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தற்போதுள்ள அமைதிச் சூழலை பயன்படுத்தி வெளிநாடுகளில் அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாக கூறி இளைஞர், யுவதிகளை ஏமாற்றும் நடவடிக்கைகள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில் குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் இளைஞர்கள், யுவதிகளிடமிருந்து பெருந்தொகையான பணத்துடன் மோசடிக்காரர்கள் தலைமறைவாகும் சூழ்நிலையிலும். காசோலை மோசடிகள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்குமாறும் பொதுமக்களை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கேட்டுக்கொள்கின்றார்.

## பர்தா அபகரிக்க முயற்சி

முஸ்லிம் பெண்ணொருவரின் பர்தா இனந்தெரியாத குழுவினரால் நேற்றுக் காலை அபகரிப்பதற்கான முயற்சியொன்று மன்னம்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. மன்னம்பிட்டி தபால் நிலையத்தில் தபாலக அதிபராக பணிபுரியும் பெண்ணின் பர்தாவையே இனந்தெரியாத குழுவினரால் அபகரிக்க முயற்சிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்திலுள்ள தபாலகத்திற்கு நடந்து செல்லும்போதே மன்னம்பிட்டி பிரதான வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளிலில் வந்த இந்த குழுவினர் தலைக்கவசம் அணிந்திருந்தமையினால் குறித்த பெண்ணினால் இந்த குழுவினரை இனங்காண முடியாது போயுள்ளது. மன்னம்பிட்டி தபால் நிலைய தபால் அதிபராக கடந்த பெப்ரவரி மாதம் இந்த பெண் நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வேலை முடிந்து திரும்பும் போதும் ஒரு குழுவினரால் பர்தாவை கழற்றுமாறு இந்த பெண் வேண்டப்பட்டுள்ளார்.எனினும் இதனை குறித்த பெண் கவனத்திற்கு கொள்ளவில்லை. இதனையடுத்தே இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மன்னப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பாக கிழக்கு மாகாண தபால் மா அதிபரின் கவனத்திற்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். அமீர் அலி கொண்டு வந்துள்ளார்.

## ரயிலில் மோதி வயோதிபர் பலி

(கொழும்பு)

நாவலப்பிட்டி வெலித் தொட்ட முல்லையில் ரயிலில் மோதுண்டு 50 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் பலியாகியுள்ளார். கலகொடையிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலிலேயே குறித்த நபர் மோதி பலியாகியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.50 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் அவருடைய உடல் இரண்டு துண்டுகளாக்கப்பட்டுள்ளது.

அவருடைய சடலம் நாவலப்பிட்டி சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகனங்களுக்குத் தடை

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாக பிரதான வீதியின் நடுவே வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதற்கு யாழ். மாநகர சபையினால் தடைகொண்டு வரப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இந்தப் பகுதியில் வைத்தியசாலைக்கு வருபவர்களும் எதிரேயுள்ள வணிக நிலையங்களுக்கு செல்பவர்களும் தமது வாகனங்களை நிறுத்திச் செல்வதனால் வைத்தியசாலைக்கு வருகின்ற அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் நோயாளர்களைக் கொண்டுவரும் இந்த வாகனங்கள் வைத்தியசாலைக்குள் நுழைவதிலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தன. இதன் காரணமாக இந்த விடயம் குறித்து ஊடகங்கள் வாயிலாக சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே யாழ். மாநகரசபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

நேற்று குறித்த பகுதியில் இந்த நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவரும் வகையில் யாழ். மாநகர சபை பணியாளர்கள் இருவர் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## மதுரையில் தீக்குளித்தது யார்? பொலிஸார் தீவிர விசாரணை

மதுரையில் கோரிப்பாளையம் தேவர் சிலை எதிரில் காங்கிரஸ் பிரமுகருக்கு சொந்தமான பெட்ரோல் பங்க்கில் நேற்று மாலை 7.30 மணி அளவில் ஒரு இளைஞர், முகத்தை கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு, ஈழ கோஷத்துடன் மண்ணெண்ணையை உடம்பில் ஊற்றிக்கொண்டு தீவைத்துக் கொண்டார்.

ஈழத்திற்கு ஆதரவாகவும், அவர் கோஷம் எழுப்பியுள்ளார். தீவைத்துக் கொண்ட அவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியானார். அவரது உடல் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் உணர்வாளர்கள் மருத்துவமனை வாசலில் குவிந்து வருகின்றனர்.

தீக்குளித்து பலியான இளைஞர் யார்? எந்த ஊரைச்சேர்ந்தவர்? என்பது பற்றிய விவரம் தெரியவில்லை. இந்நிலையில், தீக்குளித்து இறந்தவர் தீவிரவாதி என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## தூக்கில் தொங்கியது தம்பதிகளின் சடலம்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சி முனைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் கணவன், மனைவியின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்றுக் காலை பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பூநொச்சிமுனை, இசைநடனக் கல்லூரி வீதியில் உள்ள வீட்டில் இருந்தே இந்த சடலம் மீட்கப்பட்டதாகத் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் குறித்த வீட்டை சேர்ந்த தயாளன் (வயது-34), அவரது மனைவியான கஜேந்தினி தயாளன் (வயது-32) என அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கு ஆறு வயதில் மகன் ஒருவனும் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யுத்தத்தால் அழிவடைந்த பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தால் அழிவாடைந்த பாடசாலைகளை முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமான முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகள் சேதமடைந்துள்ளபோதும் 10 பாடசாலைகள் மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

இவ்வாறான பாடசாலைகளை முன்னுரிமையடிப்படையில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இந்த பாடசாலைகள் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக தொண்டு நிறுவனங்களிடமும் உதவிகள் கோரப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருவதாகவும் குறிப்பாக முல்லை வலயத்தில் பிரதான பாடங்களான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களிற்கு போதியளவு ஆசியரியர்கள் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன் இம் மாதம் தொடக்கத்தில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் 34 ஆசிரியர்கள் தமது வலயத்திற்கு இடமாற்றப்பட்டதாகவும் அவற்றில் 16 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் ஏனைய 18 ஆசிரியர்களும் மீளவும் யாழ். மாவட்டத்தில் இடமாற்றம் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.(02)

## கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப் பாதை விரைவில் திறப்பு

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக வீதி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 291 மில்லியன் டொலர் செலவில் இவ் அதிவேக வீதி கட்டுநாயக்காவிலிருந்து களனிவரை 26 கிலோமீற்றர் தூரம் கொண்டது. கடந்த 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அவ் வீதியமைப்பு பணிகள் தொடர்பில் பார்வையிடுவதற்காக அமைச்சர் சென்ற வேளையில் இவ்வாறு தெரிவித்தார்.



கரைச்சிப் பிரதேச செயலகத்தின் நாடக பயிலரங்கு பிரதேச செயலர் கோபாலபிள்ளை தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது பிரதேச செயலர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறிநிவாசன், வளவாளராகக் கலந்துகொண்ட கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.மௌனகுரு, கரைச்சி பண்பாட்டதிகாரி கு.ரஜீபன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.